விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
8 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

பதிதகம் 1 | கொழும்பு, சாவஷத்து வரு ஐப்பசி 21உ வெள்ளிக்கிழமை | Colombo, November, 7, 1947 | மன்மதாண்டு 1866 துலாஹஜ் பிறை 23 | இதழ் 157

பாகிஸ்தானை நோக்கி 'காஷ்மீர சிங்கம்' கர்ஜிக்கிறது!

படையெடுப்பின் நோக்கம் பலவீனத்தை மறைக்கவே!

"காஷ்மீர் பள்ளத்தாக்கிலேயே குழி தோண்டுவோம்!"

ஹைதராபாத்திலிருந்து ஒரு லக்ஷம் பேர்கள் வெளியேற்றம்!

புதுடில்லி, நவ 5

புதுடில்லி ரேடியோ மூலம் ஒலி பரப்பப்பட்ட காஷ்மீர் சர்க்கார் அறிக்கை தெரிவிப்பதாவது;— காஷ்மீர் மீது படையெடுத்து வந்த மலை ஜாதியார் இந்திய துருப்புகளால் முறியடிக்கப் பட்டனர். எதிரிகளின் பலம்சிதறடிக்கப்பட்டது. இந்தியராணுவவிமானங்கள் நான்கு அணிகளாகச் சென்று மறைந்திருக்கும் எதிரிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு பலத்த சேதம் விளைவித்து வருகின்றன. எதிரிகளுடன் பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் கலந்து வேலை செய்கிறார்கள் என்பதற்கு தக்க ருசுக்கள் அகப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீநகரிலிருந்து ராய்ட்டர் நிருபர் அறிவிப்பதாவது:-

இந்திய ராணுவத்தினர் 17 எதிரிகளைக் கொன்று ஸ்ரீநகருக்கு 16 வது மைலிலுள்ள போர்க்களத்தில் எதிரிகளின் மூன்று லொறிகளைக் கைப்பற்றினர். நிலைமையில் இருவித மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தளங்களைப் பலப்படுத்தவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்தியாவிலிருந்து ஏராளமான படைகள் வந்துகொண்டே இருக்கின்றன.

வடமேற்கு எல்லைப்புற மாகாண பிரதமர் கான் அப்துல் கையூம் லாகூரில் பின்வருமாறு தெரிவித்தார்:-

காஷ்மீர் வழியாக பாகிஸ்தானை வளைய இந்தியா முயல்கிறது. இம் முயற்சியை முஸ்லிம்கள் பலமாக எதிர்ப்பார்கள். காஷ்மீரில் இந்திய ராணுவம் முன்னேறினால் இடமின்றியிருக்கும் பாகிஸ்தானில் பேலம 30 லட்சம் அகதிகள் வந்து குவிவார்கள்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பாதுகாவல் படைத் தளபதி கர்னல் ஹமீத் பின்வருமாறு தெரிவித்தார்:-

காஷ்மீரில் ஏற்பட்டுள்ள நிலைமையை முன்னிட்டே புதுதாக பாதுகாவல் படை நிறுவப்பட்டிருக்கிறது. ஏனைய ராணுவப் படைகளைப் போன்றே இதுவும் அவைகளுக்கு உதவியாக நிறுவப்பட்டிருக்கிறது. 18 வயதுக்கு மேல் 48 வயதுக்குட்பட்ட இருபதினாயிரம் பேர்கள் இதிலிருக்கிறார்கள். அவர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஷேக் அப்துல்லா அறிக்கை

புதுடில்லி, நவ 5

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை நிருபருக்கு பேட்டியளித்தபோது காஷ்மீர பிரதமர் ஷேக் அப்துலா பின்வருமாறு தெரிவித்தார்:-

இப்பொழுதுள்ள நிலைமையால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் ஏற்படின், காஷ்மீர் பள்ளத்தாக்கிலேயே பாகிஸ்தானுக்கு சவக்குழி தோண்டப்படுவிடும். பாகிஸ்தானில் சர்க்காரால் சமாளிக்க முடியாதபடி நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாகவே காஷ்மீர்மீது படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் மக்கள் குழப்படியான உள்நாட்டு நிலைமையில் கவனம் செலுத்துவதால் மேலும் நெருக்கடி அதிகரிக்குமென்று பயந்து, அவர்கள் கவனத்தை வேறுபக்கம் திருப்பவே பாகிஸ்தான் படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மக்களிடையே துவேஷத்தை மூட்டி ஆத்திரத்தை உண்டாக்கி அந்த வேகத்தில் பாகிஸ்தானைப் பெற்ற தலைவர்கள் இப்பொழுது தங்கள் வாக்குறுதிகளின்படி நடக்க முடியாதிருப்பதால் அதே துவேஷத்தையும் ஆத்திரத்தையும் வேறு வழியில் திருப்பி நிலைமையைச் சமாளிக்கவே இடபொழுது காஷ்மீரப் படையெடுப்பில் பாகிஸ்தான் ஈடுபட்டிருப்பதன் காரணமாகும். நிர்மாண வேலைத் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு சக்தியற்ற தலைவர்கள் குண்டாத்தனமான கொள்கையை அனுஷ்டித்து ஜனங்கள் கவனத்தை வேறு வழிக்குத் திருப்ப உத்தேசித்திருக்கிறார்கள். பாகிஸ்தானிலிருந்து ஏராளமான அகதிகள் வெளியேறியதாலும், முஸ்லிமல்லாத வர்த்தகர்கள், வியாபாரிகள், கைத்தொழிலாளர்கள் வெளியேறியதாலும், வகுப்புத் துவேஷம் தலைவிரித்தாடுவதாலும், ஏராளமான முஸ்லிம் அகதிகள் பாகிஸ்தானில் பிரவேசித்திருப்பதாலும் இந்த நிலைமைகளையெல்லாம் சமாளிக்க முடியாத தலைவர்கள் இப்பொழுது காஷ்மீரத்தை பலி கிடாவாக்க முனைந்திருக்கிறார்கள். காஷ்மீரைக் காட்டி ஜனங்களிடையே வெறியை மூட்டி அதன் மூலம் பலம் பெற்றுக்கொள்ள முயல்கின்றனர். ஆனால் ஆக்கிரமிப்பு செய்கிறவர்களை காஷ்மீர் மக்கள் மண் கவ்வும்படி செய்வார்கள். இன்றேல் உயிர் போம் வரை போராடி மடிவார்கள் என்பதை பாகிஸ்தான் ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுமாக!

ஹைதராபாத்

ஹைதராபாத், நவ 5

அக்டோபர் 27-ம் தேதியன்று பிரதமர் வீட்டு வாசலில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் செய்த தினத்திலிருந்து இதுவரை ஒரு லட்சம் ஹிந்துக்கள் ஹைதராபாத் சமஸ்தானத்திலிருந்து வெளியேறியிருக்கிறார்கள்.

ஹைதராபாத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற மூன்று தினங்களாக வகுப்புக் கலகம் நிகழ்கின்றது. நேற்றிரவு இரு வீடுகள் தீக்கொழுத்தப்பட்டன.

பிரிவுகவுன்ஸிலுக்கு திரு. குணவர்தனா அப்பீல்

லண்டனுக்கு வழக்கறிஞர் விமானப் பாய்ச்சல்

கொழும்பு, நவ. 7

அவிசாவளை தொகுதி பாராளுமன்றஅங்கத்தவர் திரு பிலிப் குணவர்தனாவின் பிரிவி கவுன்ஸில் அப்பீல் வழக்கு விஷயமாக இங்கிருந்து திரு ஈ எவ் என். கிராட்டியென் கே. ஸி விமானமூலம் நேற்று பிரிட்டன் புறப்பட்டார். பாராளுமன்றத்திலே உள்ள அங்கத்தவரில ஒருவரான திரு. கிராட்டியென் நவம்பர் 25-ம் தேதி பாராளுமன்றம் ஆரம்பிக்முன் இலங்கை திரும்பி விடுவார் என்று நம்பப்படுகிறது.

* * *

கொழும்பு தற்காலீக நீதிபதி

கொழும்பு அடிஷனல் டிஸ்டிரிக்ட் நீதிபதியாகஇருந்த திரு விக்டர் ஈ ராஜகாரியர் கொழும்பு தற்காலீக டிஸ்டிரிக்ட் நீதிபதியாகநியமிக்கப்பட்டுளளார்

* * *

உருளைக் கிழங்கு ராத்தல் 28 சதம்

உளைக் கிழங்கு தட்டுப்பாடு காரணமாக கள்ள மார்க்கட்டில் ராத்தல் 50 சதம்வரை உயர்ந்து விட்டது. ஆனால் பொருள் கொள்வனவு-விற்பனவு இலாகா பொதுமக்களுக்கு ராத்தல 28 சதமாக விற்கிறது.

* * *

மலேயா பிரதம காரியதரிசி

மலேயா சர்க்கார் பிரதம காரியதரிசி திரு ஏ. டி. நியூபெனல்ட் பிரிட்டனில் இருந்து மலேயா செல்லுகையில் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தில் தங்கினர். மலேயாவின் புதிய அரசியல் திட்டத்தை ஜனுவரி முதல் அல்லது அதற்குச் சமீபமான காலத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்று நம்புவதாக தெரிவித்தார்.

* * *

கஞ்சா வைத்திருந்தவருக்கு ரூபா 250 அபராதம்

துறைமுகத்தில் நிற்கும் "எஸ் எஸ் மாதெராம்" என்னும் கப்பலிலுள்ள மாலுமி ஒருவர் கள்ளமாக கஞ்சா வைத்திருப்பதாக அறிந்த துறைமுக உதவி அதிகாரி ஒருவர் திரு. எச். ரத்தினசிங்கம கஞ்சா வியாபாரி போன்று வேஷமிட்டுக் கொண்டு அக்கப்பலுக்குச் சென்றதாகவும் அங்கு அஸ்பர் அலி என்பவரிடம் இருந்து கஞ்சா வாங்கியதாகவும் பின்னர் அதிகாரிகள் வந்து அவரைக் கைது செய்து சோதனையிட்டபோது ரூ. 600 மதிப்புள்ள கஞ்சா இருந்ததாகவும் கூறப்படுகிறது. விசாரணையின்பின் அவருக்கு ரூ 250 அபராதம் விதிக்கப்பட்டது.

பத்து லக்ஷ ரூபாய்!

பாராளுமன்ற அங்கத்தினருக்கு சுகவாச ஸ்தலம்

கொழும்பு, நவ 6

பாராளுமன்றக் கூட்டங்களுக்கு கொழும்பு வந்து தங்கும் அங்கத்தினர்களுக்கு சுகவாச ஸ்தலம் அமைக்க அரசாங்கம் பத்து லக்ஷ ரூபாய்வரை செலவிடுமென்று தெரிகிறது. இதற்காக எடின்பரோ கிரசென்டிலுள்ள 'ஸ்ராவஸ்தி' என்ற மாளிகையை சர்க்கார் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அதை படுத்த 5 புதிய வீடுகளையும் சர்க்கார் விலைக்கு வாங்கி அவைகளில் குடியிருப்போரை வெளியேற்றி, அவ்வீடுகளையும் இடித்துத்தள்ளிவிட்டு, அவ்விடத்தில்

ஜார்ஜ் மன்னருக்குப் பதில் ஆங்ஸானின் படம்

சுதந்திர பர்மாவின் தபால் முத்திரை

ரங்கூன், நவ. 5

ஜனுவரி 6-ம் தேதி பர்மா சுதந்தரமடையும்போது ஜார்ஜ் மன்னர் படமுள்ள தபால் முத்திரைகள் ரத்துச் செய்யப்பட்டு ஆங்ஸான் படமுள்ள தபால் முத்திரைகள் வெளியிடப்படும். அரையணா முதல் எட்டணாவரையுள்ள பல்வேறு தபால் முத்திரைகள் பல நிறங்களில் வெளிவரும்.

(ராய்ட்டர்)

நீச்சுத்தடாகம் பூப் பந்தாட்ட மைதானம் முதலியவைகளை அமைக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

மோட்டார்கள் தங்க 10 'கராஜ்'களும் அமைக்கப்படுமாம். பிரதம மந்திரி வாசஸ்தலமான 'டெம்பிள் ட்ரீஸ்'லும் 10 'கராஜ்'கள் அமைக்கப் படுகின்றன 'ஸ்ராவஸ்தி' மாளிகை காலஞ்சென்ற சுகாதார மந்திரி திரு டபிள்யூ. ஏ. டி சில்வாவுக்குச் சொந்தமாக இருந்தது. அதை திரு எச். டபிள்யூ அமரசூரியா விலைக்கு வாங்கியிருந்தார். திரு அமரசூரியா வீடமிருந்து அரசாங்கம் அதை 275,000 ரூபாய்க்கு விலைக்குவாங்கியிருக்கிறது. அதில் எல்லாவசதிகளும் அமைக்கமேலும் 7 லக்ஷ ரூபாய் செலவிடப்படும். மின்சார வசதி ஏற்படுத்த 75,000 ரூபாய் பிடிக்கும்.

ஸ்பெயினில் உள்நாட்டு யுத்தம்

கொரில்லா போராட்டம்

பாரிஸ், நவ. 5

ஸ்பெயினில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகியிருக்கிறது. குடியரசுப் படைகளான கொரில்லாக்களுக்கும் பிராங்கோ சர்க்கார் படைகளுக்கும் போராட்டம் நடைபெறுகிறது. மாட்ரிட் நகரில் நிகழ்ந்த யுத்தம் பற்றி குடியரசு ராணுவத்தின் முதல் அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது:- மாட்ரிட் எதிர்ப்புப் படைகளைப் பிடிக்க பாலிஸ்ட் படைகளால் முடியவில்லை. பிராங்கோ சர்க்காரை ஜனங்கள எதிர்ப்பதால் ஐக்கிய தேச ஸ்தாபனம் இதில் தலையிட வேண்டும்.

"திரு. டி. எஸ். சேனநாயகா ராஜினாமா செய்யட்டும்"

டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா அறைகூவுகிறார்

கொழும்பு, நவ 6

பாராளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு நேற்று மாலை கால்பேஸ் மைதானத்தில் ஒரு பொது வரவேற்பளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா பேசுகையில் யூ. என். பி யின் அதிகாரபூர்வமான பத்திரிகையில் வெள்ளவத்தை கல்கிசைத் தொகுதியின் அங்கத்தவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு அதன்தொகுதியில் மீண்டும் இந்தியப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்டு தேர்தலில் நிற்கும்படி தமக்குச் சவால் விடுக்கப்பட்டுள்ளதாகவும், தாம் இந்தச் சவாலை ஏற்றுக் கொள்வதாகவும் இதே நேரத்தில் யூ. என். பி கட்சித் தலைவர் திரு டி. எஸ். சேனநாயக்காவும் தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு இந்தியப் பிரச்னையில் மட்டுமல்ல, வேறு எந்தப் பிரச்னையையும் அடிப்படையாகக் கொண்டும் தம்மோடு போட்டி போட வரும்படியும் இந்தச் சவாலை திரு சேனநாயக்கா நவம்பர் 25-ம் தேதிக்கு முன் ஏற்று போட்டியிட முன் வந்தால் தாம் நிச்சயமாக வெற்றி பெறலாமென்றும் கூறினார்.

ஸ்ரீமதி ஆயிஷா ரவூப் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி தேசத்தை சரியான பாதையில் நடத்திச் செல்ல வேண்டுமென்றும் வஞ்சமும், ஊழல்களும் இன்று மலிந்து விட்டனவென்றும் இவற்றை ஒழிப்பதற்கு எதிர்க்கட்சியினர் நடவடிக்கை எடுப்பர் எனத் தாம் நம்புவதாகவும் கூறினார்.

இலங்கை சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர் திரு. ஆர் பெரேரா பேசுகையில் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இறுதி வரையும் திரு சேனநாயக்கா கோஷ்டியை எதிர்ப்பர் என்று குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்டு கட்சிச் சார்பில் பேசிய திரு. பீட்டர் கெனமன் பொது மக்கள் இன்று எதிர்க்கட்சியினரின் உதவியை எதிர்பார்த்திருப்பதாகவும் எதிர்க்கட்சியினர் எல்லோரும் ஒன்று கூடினாலன்றி பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதென்றும் இப்பொழுதுள்ள அரசாங்கத்தை தோற்கடிக்க முடியுமென்றும் அவசரம் தோற்கடிக்கப்பட்டே இருக்க வேண்டுமென்றும் கூறினர்.

இலங்கை சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம் பெரேரா பேசுகையில் தமது கட்சி ஒரு புரட்சிகரமான கட்சியென்றும் முதலாளிகள் அரசாங்கத்தின் கீழ் தமது கட்சி பதவி ஏற்கமாட்டாதென்றும் தொழிலாளர் விவசாயிகள் கொண்ட சர்க்கார்மூலமே முழுச்சுதந்திரமும்கிடைக்குமென்றும்கூறினார்.

தமிழக் காங்கிரஸ் சார்பில் பேசிய டாக்டர் ஈ. எம் விநாகநாதன் ஜாதி மத இன பேதமின்றி பொது மக்களுக்காகவே தாங்கள் தொண்டாற்றுவதாகவும் ஆறு எதிர்க்கட்சிக் குழுக்களும் பொதுவான குறியை ஆறு கோணங்களிலிருந்தும் தாக்குமென்றும் கூறினர்.

பிரிட்டன்:

காமன்ஸ் சபையில் பர்மா சுதந்திர மசோதா

சர்ச்சில் கோஷ்டியின் எதிர்ப்பு தோல்வி

எலிஸபெத் இளவரசி கலியாணச் செய்திகள்:

லண்டன், நவ. 5

ஜனுவரி 4-ம் தேதி முதல் பர்மா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விலகி பூரண சுதந்திரமடைய அதிகாரதத்தை மாற்றுவதான பர்மா சுதந்தர மசோதா இன்று காமன்ஸ சபையில் நிறைவேறியது. இதை ஆட்சேபித்து எதிர்க்கட்சியாரான சர்ச்சில் கோஷடியார் கொண்டு வந்த தீர்மானம் தோல்வியுறறது. மசோதாவுக்கு ஆதரவாக 288 வோட்டுகளும் பாதகமாக 114 வோட்டுகளும் கிடைத்தன. பின்னர் இரண்டாவது தடவையாக மசோதா வாசிக்கப்பட்டு நிறைவேறியது. இனி மசோதா கமிட்டியில் ஒவ்வொரு பிரிவாக விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப படும். மூன்றாவது தடவையும் வாசிக்கப்பட்டபின் லார்டு சபைக்குச் செல்லும். இன்று காமன்ஸ சபை விவாதத்தில் சர்ச்சில் தடுக்காகவும் போக்கிரித்தனமாகவும் வழக்கம்போல் தனது திமிரையும் முட்டாள்தனத்தையும் வெளிக்காட்டிப் பேசினார்.

மாலுமிகள் வேலை நிறுத்தம்

சௌதாம்டனில் மாலுமிகள் வேலை நிறுத்தம் செய்ததால் இன்று 'குயின் மேரி" கப்பல் அமெரிக்காவுக்குப் புறப்படுவது தடைப்பட்டது. இதில் வின்சர் கோமகனும் கோமகளும் புறப்பட்டுச் செல்ல ஏற்பாடு செய்திருந்தனர்.

ஸ்காட்லந்து முனிஸிபல் தேர்தல்

ஸ்காட்லந்து முனிஸிபல் தேர்தல் முடிவுகள் நேற்று தெரிவிக்கப்பட்டன தொழிற் கட்சிக்கு 78 ஸ்தானங்கள் நஷ்டமும் 12 ஸ்தானங்கள் லாபமும் கிடைத்தன.

இரவு முழுவதும் கூட்டம்

அதிகாலை 4 மணி வரை அதாவது 14 மணி 10 நிமிட நேரம் ஒரேயடியாக இன்று காமன்ஸ சபைக் கூட்டம் நடைபெற்றது. அங்கத்தினர் ஒவ்வொருவராக அலுத்துப்போய் வெளியே நழுவினார்கள். சிலர் இருந்த இடத்திலிருந்தே தூங்கி விழுந்து கொண்டிருந்தார்கள். இந்த தூக்கக் கிரக்கத்திலும் ரசமான விவாதப் போர் நிகழ்ந்தது. சமீபத்தில் கிழக்கு ஐரோப்பா சென்று சோவியத் தலைவர் ஸடாலினைச் சந்தித்துப் பேசி வந்த அங்கத்தினரான ஸில்வி கஸ ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்கும் பிரிட்டனுக்குமுள்ள தொடர்பைபபற்றி பேசுகையில் அவருக்கும் மற்றொரு தொழிற்கட்சி அங்கத்தினரான பிளாக்பர்னுக்கும் உக்கிரமான விவாதப் போர் நிகழ்ந்தது.

சாமான்கள் திவக்கம்

காலரா பரவியுள்ள எகிப்தின் வழியாக விமானங்கள் மூலம் வரும் சாமான்களை ஏற்றுக்கொள்ள முடியாதென மத்திய கிழக்கு நாடுகள் தெரிவித்திருப்பதால் அங்கு போய்ச் சேர வேண்டிய 50 டன் சரக்குகள் பிரிட்டன் விமான நிலையங்களில் திவங்கிக் கிடக்கின்றன.

நேச நாடுகளின் துரோகம்

1940-ம் வருடம் பக்குவிலுள்ள சோவியத் எண்ணெய்க் கிணறுகள் மீது நேச நாடு வெடி குண்டு பொழிவதற்கு பிரிட்டனும் உடந்தையாக இருந்ததென சுவீடன் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. இதைப் பற்றி காமன்ஸ சபையில் கேள்வி கேட்கப்பட்டபோது பதிலே இல்லை.

பெல்ஜியத்தில் பிரிட்டிஷ் ஸதானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஸர். ரெண்டல் இன்று பிரஸல்ஸ நகர் போய்ச் சேர்ந்தார்.

பிரிட்டிஷ் சர்க்கார் சிக்கன நடவடிக்கை எடுத்து வருகிற போதிலும் அவர்கள் கட்டும் பிரமாண்டமான 110 டன் எடையுள்ள "பிராபசான்" விமானம் கட்டும் வேலை நடைபெறும்.

பிரிட்டன்-அயர்லந்து வர்த்தகம்

பிரிட்டன் அயர்லந்துக்குநிலக்கரியை அனுப்பி அதற்குப்பதில் அயர்லந்திலிருந்து கோழிகளையும் மாடுகளையும் முட்டைகளையும் உணவுப் பொருளுக்காக வாங்கிக் கொள்ள ஒப்பந்த மேற்பட்டிருக்கிறது

கலையும் இளவரசியும்

இன்று இளவரசி எலிஸபெத் பிரிட்டிஷ் கலைக்கழகத்தில் பேசியபோது சத்தியத்தை அறிய அழகு அவசியமாக இருப்பது போல வாழ்க்கை வசதிகளுக்கும் அது அவசியமாகஇருக்கும்படி செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்.

இன்று ஜார்ஜ்மன்னர் அரண்மனையிலுள்ள தங்க சிம்மாசனத்திலமர்ந்து எலிஸபெத் இளவரசியின் கலியாணப் பாராடடுச் செய்திகளைப் பெற்றுக் கொண்டார்.

நவம்பர் 20-ம் தேதியன்று வெஸ்டமினிஸ்டர் தேவாலயத்தில எலிஸபெத் இளவரசி கலியாணத்திற்கு விஜயம் செய்யும் பிரிட்டிஷ் மன்னரும் மகாராணியும் இதர நாடுகளின் அரசர்களும் அரசிகளும் மூன்று ஊர்வலங்களில் செல்வர்.

(4-ம் பக்கம் பார்க்க)

திருத்தம்

இம்மாதம் இரண்டாந் தேதி வெளிவந்த "சுதந்திரன்" இதழில் 'ஒட்டுப் ஜெனரலின் 1946-47 வருட அறிக்கை எங்கே?" என்ற புகைப் செய்தியில் "1946-47 வருடமாக '1945-46' என்று திருத்தி வாசித்துக் கொள்க.

(ப-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

194 ச, தட்டாத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வதிக்க ஞ் ஞப்பதி மீ 21வ வெள்ளிக்கிழமை

அடிமைப் புத்தி!

சென்ற வாரம் சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. பண்டாரநாயக்கா யாழ்ப்பாணஞ் சென்றிருந்தார். அவரை "நான முந்து, நீ முந்தி" என்று சில போலித் தமிழ்த் தலைவர்கள் வரவேற்றார்கள். பெரும் பண விரையஞ்செய்து விருந்து கொடுத்தார்கள். மலர் மாலைகளுடுவதில்கூட யாருடைய மாலை விசேஷமானது என்று போட்டி போட்டு மாலையிட்டார்கள். கூலிக்கு ஆட்களைப் பிடித்துக்கூட மலைக்கு மேல் மாலையாக இரு பிரகஸ்பதிகள் அவருக்கு போடுவித்தார்கள். இந்த மாதிரியான புகழியற்ற செயல்களையிடு உண்மைத் தமிழ் மக்கள் தலை குனியத்தான செய்வார்கள். அதற்கு ஆதாரமாக நமக்கு வந்துள்ள கடிதங்களே சான்று பகருகின்றன

விருந்தினராக வந்தவர்களை வரவேற்பது தமிழ் மக்களது வழக்கம விருந்திருக்க உண்ணுதவன் தமிழன் ஆனால் இதற்காகப் பொது மக்களிடப் பணம் பறித்து வரவேற்புகள நடத்துவதும், மலர் மாலைகள் போடுவதும் முறையல்ல என்பதை இப் போலித் தமிழ்த் தலைவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறோம்.

உண்மையில் மலர் மாலையிட்டு வரவேற்பது எவரை? உண்மைத் தேசத் தொண்டனை ஜனங்களின் தலைவனை-தனலமற்ற தியாகியை தான பொது ஜனங்கள் தாமாக உண்மை மதிப்புடன் மலர் மாலையிட்டு உபசரிப்பார்கள் இதைவிட்டு பட்டங்கள், பதவிகள் பெறவும், அதிகாரத்திலுள்ள ஒருவரின் நல் வார்த்தையைப் பெறுவதற்காகவும் ஒரு சிலர் வரவேற்புகள் செய்வது தமிழன் தன் மானத்தை இழந்து விட்டான் என்பதையே காட்டுகின்றது அன்று இலங்கையினை ஆண்ட மறைந்த தமிழர் சென்றவாரம் யாழ்ப்பாண நிலைமையைப் பார்த்திருந்தால் கண்ணீர் விடிருப்பர் என்பது திண்ணம் அடிமைப் புத்தியின் உச்ச நிலையையே மாற்றுனுடன் சேரும் சில தமிழ் வாபீஷணுழ்வார்கள் செய்கிறார்கள

யாழ்ப்பாணத் தமிழ் மக்களே இன்னுமா உறங்குகின்றீர்கள் உங்கள் வீரமெங்கே? சுவாதீனமெங்கே? 150 வருட காலமாக வெள்ளையனின் ஆட்சியில் இவைகள் அடியோடு ஒழிந்துவிட்டதா? தலைவரென்பட்டோரைநீவிர் தொழுதுக் கௌரவிப்பதா? போலிகளின் பின்னுல் சென்று கைகட்டி வாய் புதைத்து நிற்கப்போகின்றீர்களா? உலக்கை தேய்ந்து உளிபட்டியாகி, ஈரறில் அழிந்துபோகும் காலம் வந்தாலும் வந்துவிடக்கூடும் தமிழ் மக்கள் இப் போலிகளின் சபட நாடகங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டும்.

இன்னும் மலர் மாலைகளை ஏற்று ஒன்றுக்கு மல் ஒன்றுகத தலைமடும் குட்டி அழபார்த்த மந்திரிக்கு ஒரு வார்த்தை சொல்ல விருப்புகிறோம் வரவேற்பு முடிவில் ஓரிடத்தில் "என்னைப்போல் வேறு யாருக்கு இத்தகைய வரவேற்பும், மலர் மாலைகளும் யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ளன" என்று மந்திரியார் கூறியதாக நாம் அறிகிறோம். இது போலிக் கௌரவிப்பு என்று நாம் அவருக்குக் கூற விரும்புகிறோம். வெளிப்படையாகச் சொன்னுல் இரண்டு மூன்று சுய நல பிரகடனங்களின் வேலைதான அதுவுமல்லாமல் உண்மையில் திரு பண்டாரநாயக்காவே யாழ்ப்பாணத்திலுள்ள தமது விபீஷணுழ்வார்களுக்குபூதிபெற்ற போலி கௌரவமாகும் அதை நகர சபைத் தலைவராகிய திரு எஸ். பொன்னம்பலமே

நெய், வெங்காயம், வெல்லம், கிழங்கு

ஏற்றுமதியை கட்டுப்படுத்த சென்னை சர்க்கார் ஏற்பாடு

சென்னை, நவ 5

பண்டங்களின் உற்பத்தி உபயோகம் இரண்டின் மதிப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மாகாணத்திற்கு வெளியே ஏற்றுமதிசெய்ய இப்பொழுது அனுமதிக்கப்பட்டு வருகிறது. இந்த முறை திருப்திகரமாயிலலையென்று சர்க்கார் கருதுவதாகத தெரிகிறது எனப் பண்டத்தையும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்குமுன் சம்பந்தப்பட்ட ஜில்லாவில் அதன விலைவாசிகள் அதிகப்படியாக கையிருப்பு இருப்பதை காட்டுகின்றதா என்பதை அறியவேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது இதற்காக நெய் வெங்காயம், வெல்லம், உருளைக்கிழங்கு ஆகியவை பிரதானமாக வகையும் ஜில்லாக்களிலுள்ள முக்கிய மார்க்கெட்டுகளில விலைவாசிளின் போக்கைக் குறிதது வாராவாரம் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டுமென்று சர்க்கார் சிவில் சப்ளை இலாகாவை கேட்டிருக்கிறது இந்த ரிஜிஸ்டரின்படி பல வாரங்களில் விலைகள் ஏறிகொண்டு வருகிறதாகத் தெரிந்தால் அந்த பண்டங்கள் அரிதாயிருப்பதாகவே அர்த்தம் இப்படிப்பட்ட நிலைமையில் உற்பத்தி உபயோகமதிப்புகள் அதிகப்படி கையிப்பு இருப்பதாகக் காட்டினும் அந்தப் பண்டங்களை ஏற்றுமதி செய்ய ஊக்கமளிக்கக் கூடாது என்பது சர்க்காரின் கருத்து எனத் தெரிகிறது.

புதிய தியவடன நிலமை பதவி ஏற்றார்

புனிதப் பல் காட்சி

கண்டி, நவ 6

தலதா மாளிகையின் நிர்வாகப் பொறுப்பு புதிய தியவடன நிலாமையான திரு. ஸி பி நுவெலயிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. புத்த பகவானின் புனிதப் பல் வைத்திருக்கப்பட்ட இடததில் சிறிது நேரம் அங்கு வந்திருந்தோர் பார்க்கக் கூடியதாக அப்புனிதப் பல் வைக்கப்பட்டிருந்தது நேற்று புதிய தியவடன நிலாமை பதவி ஏற்பதால் தலதா மாளிகையிலுள்ள பொருள்கள் கணக்கெடுக்கப்பட்டன பொதுகர்மகர்த்தா திரு. டி. ஈ. விஜயவர்தனு இங்கு சமூகமளித்த ஆலயதத்திலிருந்த சுமார் 500 பொருள்களையும் கணக்கிட்டு அவற்றை சரிதானேவென்று பார்த்து புதிய தியவடன நிலாமையிடம் ஒப்படைத்தார். இந்த பதவி மாறறத்திற்கான பொருள்கள் கணக்கெடுப்பு சுமார் 4 மணி நேரம் நடைபெற்றது என்று கூறப்படுகிறது.

இலங்கை சர்வகலாசாலை எதிர்காலம்

கொழும்பு, நவ 6

இலங்கை டொமினியன் அந்தஸ்தைப் பெற்றபின்னர் பிரிடனின் சர்வகலாசாலைகளின் பிரதிநிதிகளின் சபையில் இலங்கை சர்வகலாசாலை பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. டொமினியன் நாடுகளுக்கு இச்சபையில் பிரதிநிதித்தும் கிடையாது ஆனுல் இச்சபை இலங்கை சர்வ கலாசாலை உபஅதிபதி சர் டாக்டர் ஐவர் தென்னிங்ஸ் இச்சபையின் இலங்கத்தவராக இருக்கும்படியும் குடியேற்ற நாடுகளிலுள்ள சர்வகலாசாலைகள், கல்லூரிகள் முதலியனவும் இவரது உதவியைப் பெறக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும் கேட்டுள்ளது. மேலும் இச்சபையில் இலங்கை அங்கத்துவம் வகித்த காலத்தில் புரிந்த சேவைகளுக்காக இலங்கைச் சர்வ கலாசாலையைப் பாராட்டுவதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பத்திரிகைகளுக்கு பகிரங்கமாகக் கூறியுள்ளார். எப்படி இருந்தாலும தமிழ் மக்கள இப் போலிக் கௌரவிப்புகளுக்கு இடங்கொடுக்கக்கூடாது.

தமிழ் ராஜா ஆளும் ஒரே சமஸ்தானம்

பூரணப் பொறுப்பாட்சிக் கிளர்ச்சி

உடனே இடைக்கால சர்க்காரும் ஏற்படவேண்டும்

நவம்பர் 15-ம் தேதி மக்கள் சுதந்திரப் போர் ஆரம்பம்

புதுக்கோட்டை, நவ 5

இந்தியாவில் தமிழ் ராஜா ஆளும் சமஸ்தானம் ஒன்றுதானிருக்கிறது. அது புதுக்கோட்டை சமஸதானம். இதற்கு பிரதிநிதித்துவமும் சட்டசபையுமிருக்கிறது. மைசூர், கொச்சி, திருவாங்கூர், காஷ்மீர் சமஸதானங்களில் சமீபத்தில் மக்கள் பொறுப்பாட்சி நிறுவப்பட்டது போல இங்கும் மக்கள் பொறப்பாட்சி ஏறபடுததவேண்டுமென்றும அதற்கிடையே இடைக்கால சர்க்கார் அமைக்க வேண்டுமென்றும கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய சமஸதான பிரஜைகள் மகாநாட்டைச் சேர்ந்த திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை சமஸதானங்களின் பிரதேச கவுன்ஸில் நிர்வாக கமிட்டியின் கூட்டம் ஒன்று நேற்றிரவு பிரதேச கவுன்ஸில் உப-தலைவர் ஸ்ரீ எஸ் நீலகண்ட ஐயர் தலைமையில தொண்டைமான் ஜவுளியில் தொழிற்சாலையில நடைபெற்றது முழு பொறுப்புள்ள சர்க்கார்களை மக்களின் விருப்பப்படி அமைக்க தென்னிந்தியாவில் திருவாங்கூர், மைசூர் மகாராஜாக்கள் கையாணடுள்ள முறைகளையும் வடக்கே காஷ்மீர் மகாராஜா அனுஷ்டித்துள்ள முறையையும பின்பற்றுமாறு புதுக்கோட்டை ராஜாவைக் கேட்டுக்கொண்டு ஓர் தீர்மானம் நிறைவேறியது.

மக்கள் வசம் அதிகாரத்தை மாற்ற இச் சமஸ்தானங்கள் ஆரம்பத்தில் பின்வாங்கியுபறகு இவர்கள் பிரஜைகளின் விருப்பத்திற்கு பணியவேண்டியிருந்ததை மற்றொரு தீர்மானத்தின் மூலம் எடுததுக்காட்டப்பட்டது.

ஆகையால் நியாயமான உரிமைகளைப் பெற கடைசி ஆயுதமான சத்யாக்ரகத்தை மக்கள் செய்யும்படி புதுக்கோட்டை ராஜா நடந்துகொள்ளக கூடாது என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்விதம் இருந்தும் சத்யாக்ரகம் செய்ய மக்கள் கட்டாயப்படுததப்பட்டுப் போராட்டம் தவிர்க்க முடியாததாகவிருந்தால் நியாயமான கோரிக்கைகளுக்கு மக்களுக்க முழு ஆதரவு அளிக்கப்படும் என்று இக் கவுன்ஸில் தீர்மானித்தது ஆனுல் போராட்டததை கையாளுமபோது நியாயத்தையும் அஹிம்சையையும் உறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை தெளிவுபடுததப்படுகிறது.

திருவப்பூர் தொண்டைமான் ஜவுளி மில சொந்தக்காரர் ஸ்ரீ கே. கே என். வாஸு பிரதேச கவுன்ஸில் அங்கத்தினர்களுக்கு ஓர் விருந்தளித்தார்.

சமஸதானததின் நலனைக் கருதி சமஸதான காங்கிரஸுடன் திருப்திகரமான ஓர் சமரஸ முடிவுக்கு வருமாறு பிரதிநியேகமாகக் கேட்டுக் கொண்டு மேல் கூறப்பட்ட தீர்மானங்களின் நகல்களை மகாராஜா திவான் புதுக்கோட்டை சமஸதான மந்திரிகள் ஆகியோருக்கு பிரதேச கவுன்ஸில் பொதுக் காரியதரிசி ஸ்ரீ கே. பி மாதவன் நாயர் அனுபபியிருப்பதாகத் தெரிகிறது.

தலைவர்கள்-திவான் சந்திப்பு

இங்கு நடைபெற்ற சமஸ்தான காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டைச் சேர்ந்த திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை சமஸ்தானங்களின் பிரதேச கவுன்சில் உப-தலைவர் ஸ்ரீ எஸ். நீலகண்ட ஐயர் பொதுக் காரியதரிசி ஸ்ரீ கே பி. மாதவன் நாயர் ஆகியோரும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினரும், பிரபல காங்கிரஸ் தலைவருமான ஸர் கணேசனும் திவான் அழைப்பிற்கிணங்கி புதுக்கோட்டை திவான் கான்பகதூர் பி. கலிபுல்லா சாஹிப் பகதுரை அவரது இல்லததில் நேறறிரவு சந்தித்தனர் சமஸ்தானததில் நிலவ வரும் தற்சமய அரசியல் நிலைமையைப்பற்றியும் முக்கியமாக நவ 15உ முழுப் பொறுப்புள்ள சர்க்காருக்காக போராட சத்யாக்ரஹம் செய்ய சமஸ்தான காங்கிரஸ தீர்மானம் செய்திருப்பதை குறித்தும் மூன்று மணி நேரம் வரை தலைவர்களுடன் திவான் தாராளமாக விவாதித்தார்.

கூட்டம் முடிந்தபின் வழியில் மந்திரி ஸ்ரீ ஷண்முகம் செட்டியை சந்தித்து விடடு தலைவர்கள் தொண்டைமான் ஜவுளி மிலுக்கு வந்து திவானுடன் நடததிய சம்பாஷணைகளபற்றி சமஸ்தானக் காங்கிரஸ் காரியகமிட்டி அங்கத்தினர்களுக்கு தெரிவித்தனர். இவர்கள் நடததிய சமபாஷணைகள் விபரம் பதிரிகைகளுக்கு தெரியப்படுத்தவிலலை.

தலைவர்களுடன் தான் நடத்திய சம்பாஷணைகளைப் பற்றி காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களை அறிய தலைவர்களுக்களித்த வாக்குறுதியை காப்பாற்றி இன்று காலை திவான் தொண்டைமான் ஜவுளி மிலுக்கு வந்து தலைவர்களைச் சந்ததார். இக்கூட்டம் ஒரு மணி நேரம் வரை நீடித்திருந்தது.

"தினமணி" நிருபருக்களித்த பேட்டியில் திவான் தங்கள் சம்பாஷணைகள் வெளிப்படுத்தப்படக் கூடாதென்றும் சமரச ஒப்பந்தத்தின் நலனைக் கருதி இவைகளைப் பததிரிகைகளிலே பிரசுரிப்பது சரியல்லவென்றும் தற்போது சமஸ்தானத்திலுள்ள நிலைமையைப்பற்றி தாராளமாகவும் மனதை திறந்து விடடும் தலைவர்களுடன் தான் விவாதித்ததாகவும் கூறினார் இவ்விஷயத்தில் கூடிய சீக்கிரப் ஓர் சமரச உடன்படிக்கை ஏற்படுமென்று இவர் நம்பினார்.

உலகிலேயே மிகப் பெரிய விமானம்

700 பேர் உட்கார வசதி

நியூயார்க், நவ. 5

அமெரிக்காவில் பெரிய கோடீஸ்வரரான ரோவார்ட் ஹியூஸ் என்பவர் யுத்த காலத்தில் யு எஸ் சர்க்காரால் உபயோகப்படுததப்பட்ட விமானத்தை வாங்கி 175,0000 பவுண் செலவழித்து 700 பேர் உட்காரும் படிக்கும் 100 கெஜ நீளம் இறக்கைகள் உடையதாகவும், வால் முனை 8 அடுக்கு மாடியை விட உயரமாகவும் தீ தியமைத்தார் இவ்விமானஞ்சல்லிஹார்பரில் பரீக்ஷார்த்தமாக பறக்கவிடப்பட்டது. இந்த விமானத்தைக் கட்ட அமெரிக்கா 45 லட்சம் பவுண் செலவழித்துள்ளது. செலவு விவரத்தை செனட் கமிட்டி கண்டுபிடித்துவருகிறது. [ரூபோப்]

சென்னை மாகாணத்தில் புதிய சுரங்கப் பொருட்கள்

கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன

சென்னை நவ 5

சென்னை அசெம்பிளியில ஸ்ரீ ராமபிநீடுவின் கேள்விக்கு கைத்தொழில் மந்திரி ஸ்ரீ சீதாராம ரெட்டி பதிலளிக்கையில கீழ்க்கண்ட இடங்களில் கீழ்க்கண்ட புது உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறினார்:-தென் ஆற்காட்டில் "லிக்னைட்" நாமக்கல் தாலூகாவில் குரோமைட் திருச்செங்கோடுபவானி தாலூகாக்களில் கொலப்பைட்-டாண்டலைட் சேலம், திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களில் உயர்தர சுண்ணாம்புக் கல்லும் நாமக்கல் தாலூகாவில் மாகனீஸைட்டும் நெல்லூரிலுள்ள சுண்டி ஜமீந்தாரியில கியானைட்டும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நீராவியும் மின்சாரமும் உண்டாக்கவும் பாய்லர்களுக்கும் "லிக்னைட" உபயோகிக்கப்படலாம்.

மாகாணத்தின் உலோக வசதிகளை அபிவிருத்தி செய்யும் உரிமை வெளியார்களுக்கு (மாகாணத்தவரல்லாதாருக்கு) கொடுக்கப்படுவது பற்றி தான் வாக்குறுதியளிப்பது சாததியமில்லை என ஸ்ரீ சலாமின் கேள்விக்கு மந்திரி பதிலளிததார்.

புதிய நெசவு யந்திரத்தை தயாரித்த தமிழர்

பம்பாய் சர்க்கார் பணஉதவி

பம்பாய், நவ. 5

பம்பாய் காடவ்மில் தொழிற்சாலையில் பரிசோதனை வேலைகளை நடத்துவதற்காக சென்னையைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். நாராயண ஐயங்காருக்கு பம்பாய் சர்க்கார் ரூ. 2000 வழங்க அங்கீகரித்துருக்கிறது. இவர் அமைத்துள்ள தானுகவே வேலை செய்யும் நெசவு யந்திரத்தையொட்டி இம் மில்லில் 4 மாத காலம் பரீக்ஷைகள் நடத்துவார்.

சென்னை மாகாணத்தில் பாக்கு உற்பத்தி

கூட்டுறவு விற்பனை வசதிகளு ஏற்பாடு

புதுடில்லி, நவ 4

கொட்டைப்பாக்குஅட்ஹாக கமிட்டியில விவசாய ஆராய்ச்சி கவுன்சில் உப தலைவர் ஸர் ததாதார் சிங் பேசுகையில் கொட்டைப்பாக்கு மரங்கள் மூலமாக ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு ஜீவனுபாயம் ஏற்படுவதால்தான் பொருளாதாரமுக்கியததுவம் அடங்கியிருப்பதாகக் கூறினார்.

இந்தியாவல மொத்தம் சுமார் அறுபதரை லட்சம் பணங்கு கொட்டைப்பாக்கு உற்பததியாவதாக அறிவித்தார் சென்னை மாகாணததில் மட்டிலும் 229,800 ஏககராக்களில் அவை உற்பததி செய்யப்படுகின்றன.

கூட்டுறவு மார்க்கெட் வசதி ஏற்படுததுவது உடனடியான தேவை யென்றார்.

பாக்கு உற்பத்தியை அலகரிப்பது பாக்குமரத்தின் எல்லா பாகங்களையும் உபயோகமான முறையில் பயன்படுத்துவது, பாக்கை நல்லமுறையில் பண்படுததுவது போன்றவைகளை ஆராய ஒரு மத்திய ஆராய்ச்சி நிலயம் ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை கூறினர்.

இந்தியர் கல்விக்கு அமெரிக்கா உதவி

2 கோடி ரூபாய் யுத்த சாமான்கள் நன்கொடை

லண்டன், நவ. 5

அமெரிக்காவின் இரவல்-குத்தகை ஏற்பாட்டின்படி இந்தியாவில் தற்போது அதிகமாகவுள்ள சாமான்களிலிருந்து கிடைக்கும் பணத்தை இந்தியாவின் கல்வி வசதிகளுக்காக ஒதுக்க அமெரிக்க சர்க்கார் சம்மதித்துள்ளது. சுமார் 150லிருந்து 200 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் தற்போது இந்தியாவில் இருக்கிறது. இந்த தகவலை அமெரிக்கா சர்வகலாசாலைகள் உப அத்யக்ஷகரான டாக்டர் ஜியாவுத்தீன் அஹ்மதுடன் விவாத சமயத்தில் பேசுகையில் வெளியிட்டார். அமெரிக்காவுக்கு இந்தியா மாணவர்களை அனுப்பினால் இந்தத் தொகையை டாலராக மாற்றவும் அமெரிக்கா தயாராக இருப்பதாக அவர் கூறினர் இப்பொழுதுதான் டாக்டர் ஜியாவுத்தீன் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்துள்ளார்.

இலங்கைக்கு 750 டன் உருளைக் கிழங்கு

கொழும்பு, நவ. 5

வாரத்தின் முடிவு பகுதியில் இலங்கையில் சுமார் 750 டன்களுக்கதிகமான உருளைக் கிழங்குகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக உணவுக் கமிஷனர் திரு கே ஆழ்வாப்பிள்ளை தெரிவிக்கின்றார்.

சோனகர்களின் பரிசுத்த கதலம்

பாதுகாக்க வேண்டும்

சளுத்துறை, நவ. 6

இலங்கையில உளள சோனகர்களுக்கு சரித்திரப் பிரசித்தி பெற்றதும், பரிசுத்தமானதுமென்று சருதப்படும் இடம் ஒரு பக்கத்தில் கடலாற் பாதிக்கப்படுவதாகவும் மறுபக்கத்தில் அர்பன்சபை அதனைத் திருத்திப் பாதுகாக்காது கவலையீனமாக இருப்பதாகவும் இவ்வாதம் தொடர்ந்திருக்க விடின் இன்னும் சிறிது காலத்தில் அந்த இடம் இல்லாதொழிந்தோ அன்றி, மறக்கப்பட்டோவிடும் என்று நேற்று மருதானையில் வேருவிளை யென்னும் இடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டது. இந்த இடத்திலேதான் சோனகர் முதன் முதலில் இறங்கியதாகவும் இந்த இடத்தைப் பாதுகாக்க சோனகர்கள் ஐக்கியப்பட வேண்டுமென்றும இக்கூட்டததில் பலரும் பேசினர்.

ஜெர்மன் வர்த்தகம்பற்றி திரு. கொரியா அறிக்கை

இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, நவ 6

லண்டனிலுள்ள இலங்கை சர்க்கார் பிரதிநிதி திரு ஜி ஸி. எஸ். கொரியா ஜெர்மனிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்த்து அறிந்து இலங்கை சர்க்காருக்கு ஒரு அறிக்கை அனுப்பியுள்ளார். அதில் ஜெர்மனியுடன் வர்த்தகத் தொடர்புபற்றி அவர் விளக்கமாக குறிப்பிட்டுள்ளாரென்று தெரிகிறது.

இந்திய முஸ்லிம்களிடையே போட்டி மகாநாடு ஏன்?

அரசியல் நிர்ணய சபையிலிருந்து கலிக்குஜமான் ராஜினுமா?

குதாய் கித்மத்கார் தளபதி கைது

புதுடில்லி, நவ. 4

இந்தியாவின் புதிய அரசியல் திட்டததில் பொருளாதாரம் சமபந்தமான ஷரகத்துக்களைப் பரிசீலனை செய்ய ஸ்ரீ என். ஆர். சர்ககாரைத தலைவராகவும், ஸ்ரீமான்கள் வி எஸ சுந்தரம், எம வி ரங்காச்சாரி ஆகியவர்களை அங்கததினர்களாகவும் கொண்ட நியுணர்கள் கமிட்டி ஒன்றை அரசியல் நிர்ணய சபைத தலைவர் அமைத்திருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

பாகிஸ்தான் நிதி மகாநாடு

லாகூர், நவ 3

இன்று லாகூரில் அசெம்பிளி கட்டிடததில் பாகிஸ்தான் நிதி மகாநாடு நடைபெற்றது ஜனுப் ஜின்னு தலைமைவகித்தார் மகாநாட்டின நடவடிக்கைகள் பரம ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

அ. நி. சபையிலிருந்து கலிக்குஜமான் ராஜினுமா

கராச்சி, நவ. 4

ஜனுப்சுஹ்ரவர்திகலகததாவில் இந்திய முஸ்லிம் தலைவர்களின் மகாநாடொன்றை கூட்ட உத்தேசித்திருக்கிறாரலலவா? இதற்கு வருமாறு வந்த அழைப்பை ஐ மா. அசெம்பிளி லீக் கடசித தலைவரும் இந்திய யூனியன் அ. நி. சபை லீக் கடசித தலைவருமான சௌதரி கலிக்குஜமான் ஏற்க மறுததுவிட்டார். ஸ்ரீ கலிக்குஜமான ஜனுப் சுஹ்ரவர்திக்கு அனுப்பியுள்ள தநதியில் கூறியிருபதாவது:-

புதிய அமைப்பில் அதற்குத் தக்கபடி கொள்கைகளை உருவாக்கி நிறைவேற்றி வைகக இளைஞர்களுக்கு இடமளிகக்கும் பொருடடு நான ஐ மா. அசெம்பிளியிலிருந்தும், இந்திய அ. நி சபையிலிருந்தும் ராஜினுமாச் செய்து விட்டேன். மேலும் ஐ மா. வில் ஹிந்தி, சர்ககார் பாஷையாக்கபபட்டிருக்கிறது அதைக் கற்றுக் கொள்ள நான் இஷ்டப்படவில்லை.

போட்டி மகாநாடு ஏன்?

புதுடில்லி, நவ. 4

ஆஜாத் ஒருமகாநாடும, சுஹ்ரவாதி ஒரு மகாநாடும் ஆக இரு மகாநாடுகள் கூட்டப்படுவது சம்பந்தமாக புரபஸர் அப்துல்மஜீத் கூறுவதாவது:-

ஓரே சமயததல இரு குதிரைகளில் சவாரி செயயும் முயற்சியை ஜனுப் சுஹ்ரவர்திவிட்டுவிட வேண்டும் கூமுக்கும் ஆசை, மீனசக்தும் ஆசை என்ற கொள்கை கூடாது. தேசததுககு வகுப்புவாத ஸ்தாபனங்களால் அளவற்ற நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வகுப்பு ஸதாபனங்கள் அரசியலை நீக்கிவிட்டு முஸ்லிகளின் சமூக முன்னேற்றததுக்காக உழைக்க வேண்டும. முன்னேறறததுக்கு ரூந்தகம் ஏற்படுததும் பழக்க வழக்கங்களையும் மூட நமபிக்கையையும் நீக்க வேண்டும் மகத்தின் பெயரால் முன்னேற்றத்துக்கு பாதகம் விளைவிக்கும் புலுருவிகளை வேரொடு களைந்தெரிய வேண்டும்."

குதாய் கித்மத்கார் தளபதி கைது

பெஷாவர், நவ. 3

குதாய் கித்மதகார் தளபதியும் எல்லை சட்டசபை அங்கததினர்களில் ஒருவருமான கான் சமின் ஜானகான் இன்று போலிசாரால் கைது செய்யப்பட்டார்.

குதாய் கித்மத்கார் ஸதாபன முக்கியஸதர்களில், முதலில் கைதியாகியிருப்பவர் இவரே.

இரண்டு மாதங்களுக்கு முன் குதாய் கித்மதகார் ஊழியர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கனுப்பப்பட்டது நினைவிருக்கலாம்.

சென்னை டாக்ஸி முதலாளிகள் சங்கம்

சென்னை, நவ. 3

சென்னை டாக்ஸி சொந்தக்காரர்கள் சங்கக் கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. சங்கத் தலைவரும் "ஸமடே அப்ஸர்வர்" ஆசிரியருமான ஸ்ரீ பால சுப்பிரமணிய முதலியார், சிகாகோவில் 1948 ஜனுவரியில் நடைபெறஇருக்கும் அமெரிக்க டாக்ஸி கார்கள் சங்க 6-வது மகாநாட்டிற்கு சென்னை சங்கததின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பௌத்த சமய பாடப் பரீட்சை

கொழும்பு, நவ. 6

கொழும்பு ஒய். எம். பி ஏயினுல் வருடாந்தம் நடத்தப்படும் சமய பாடப் பரீட்சை இவ்வருடம் ஜூலை 7-ம் தேதி நடைபெற்றிருந்தது. இப்பரீட்சையில் கலந்துகொண்ட 512 பாடசாலைகளிலும் மொத்தமாக 29,566 அபேட்சகர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். இப் பரீட்சையில் பங்குபற்றியிருந்த 21744 அபேட்சகர்களில் 11,596 பேர்கள் சித்தியடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சிங்கள ராஜா, சிங்கக் கொடி

சாதியபிமானிகள் கூட்டத்தில் சதியாலோசனைகள்

ஏழை இலங்கையில் சுவர்க்கபோக மனுபவிக்க விரும்பும் யூ. என். பி.கள்

மொறட்டுவைதொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவரான திரு சோம வீர சந்திரசிரியின் பத்திரிகையான "நிதாஸ" கடந்த புதன்கிழமை எழுதியவற்றின் தமிழாக்கம்:

சேனநாயக்கா மூப்பனாரின் இன்றைய வேலைத்திட்டங்களை பற்றி சிறிது யோசிக்ும் போது சிலனஞ்சிறு இலக்கை அவருக்கு எப்மட்டு? அமெரிக்காவைப்போன்ற தேசமாயிருந்தால் ஒரு வகையில் சமாளிக்கக் கூடியதாய் இருக்கும்! அவரின் மூளையும் பெரியது; வேலைத்திட்டங்களும் நீளமானது. பெருத்த குடும்பம், பல தொல்லைக்காரர். இவையெல்லாவற்றையும் சமாளிக்க இலங்கை சின்னஞ் சிறியதுதான்.

ஃ ஃ ஃ

சென்ற 17 வருட காலமாக செய்த பாபத்தைத் தொலைக்க முடியாமல் இருக்கிற சேனநாயக்கா மூப்பனார், பார்லிமெண்ட் ஆரம்பதோடு செய்திருப்பதானது அனந்த பிறவிகளதோறும் தொலைக்க முடியாத பாப கிருத்தியங்களேயாகும். அவர் உறவினர்கள், அத்தியந்த தோழர்கள் இவர்களுக்கெல்லாம் உயர் பதவிகளும் அதற்கான சம்பளம் விசேஷ வசதிகள் ஆகியவை இவற்றில் பிரதானமானவை. அடுத்தபடி கையாலாகாத பேர்வழிகளுக்கு உதவி மந்திரி பதவிகள் கொடுத்ததாகும். மற்றப்படி கையாட்களுக்கு விசேஷத்துவம் காட்டியது.

ஃ ஃ ஃ

யூ. என். பி யைவிட பார்லிமெண்டுக்கு சென்ற அநேகருக்கு சம்பளத்தைப் பற்றி அவ்வளவு லட்சியமில்லை. சம்பளத்தைப்பற்றியும் மற்றும் வசதிகளைப் பற்றியும் ஏதாவது முணுமுணுப்பும் 'கரைச்சலும்' இருக்கக் கூடுமானால் அது தேசத்தை குறையாடி தம் சுகபோகங்களை பார்த்துக்கொள்ள விரும்புகிற "அலிபாபா" கூட்டத்தாரிடையேதான் இருக்கும். இந்த அலங்கோலமும் தேச மக்களுக்கு தெரிந்ததுதான்.

ஃ ஃ ஃ

முதலாவது அடாத்தான செய்கை தமக்குப் போதுமானபடி சம்பளத்தை நிர்ணயித்துக் கொண்டது இதிலும் பார்க்க அடாத்தானது இராஜ சௌகரியமுள்ள மாடிக்கட்டிடத்தை அலங்கரிக்க லக்ஷக்கணக்காக செலவழித்தது. இதிலும் பார்க்க அடாத்தானது பிரதம மந்திரியானதும் இவ்வளவு காலம் குந்திக்கொண்டிருந்த மயான வீதியிலுள்ள பழைய வீடான "ஹுடலண்டை" விட்டு கடற்காற்றை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் "டெப்பிள்ட்ரீஸ்" மாளிகைக்கு வாசம் செய்ய எண்ணியதாகும். இவற்றிற்கு குந்தாப்போல் மற்றப்படி இவ்வளவு காலமும் பாவித்த பழைய காரை இரும்புக் கடைக்கு கொடுத்து விட்டு கவர்னரின் காரைப்போல பெரிய காரை உபயோகிப்பதற்கு எண்ணியதாகும்.

ஃ ஃ ஃ

இவையெல்லாவற்றையும் தமது சொந்தச் செலவில் செய்து கொண்டால் தடுத்துக் கேட்பதற்கு எவருக்குமே உரிமையில்லை. ஆனால் பொதுப் பணத்திலிருந்து செலவு செய்வதைப் பற்றியே எவரும் ஆட்சேபிக்கிறார்கள். ஆயிரக்கணக்கிலல்ல; லட்சக்கணக்காகவே பொதுப் பணம் நாஸதி செய்யப்படுகிறது.

ஃ ஃ ஃ

தமக்கு தடையாய் உள்ள சட்டங்களையும், வாசஞ்செய்தவீட்டையும், பாவித்த காரையும் மாற்றிக் கொண்ட சேனநாயக்கா மூப்பனார் இப்படியாக தமது "பழைய சாமான்"களையும் மாற்ற முயற்சித்தால், "கொடி" யைபற்றி முடிவு கடைசியில் வேறும் என்னென்ன மாற்றிக் கொள்ள எண்ணுவாரோ என்று பொது மக்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். ஏழைகளின் துரதிர்ஷ்ட வசமாக "ஏதும்" எண்ணிவிட்டால் உண்மையிலேயே பொது மக்கள் பயப்பட வேண்டியதுதான். எதற்காக? இதற்கெல்லாம் பொதுப் பணம் பலியாகிவிடும் என்பதுதான் ஏழை மக்களின் பொது நன்மையை பூன்னிட்டு அப்படி "ஏதும்" சேனநாயக்கா மூப்பனாருக்கு எண்ணமுண்டாகாதிருக்கும்படி பிரார்த்திப்போமாக.

* * *

அசகாய வீரரான கூட்டத்தாருக்கு தற்போது சுதந்திரம் கிடைத்தாய் விட்டது. கடற்காற்றால் சூழப்பட்ட மாடி வீடுகளா?-பிரயாண வசதிக்கேற்ற பெரிய சலூன் கார்களா? சரிரப் பாதுகாப்பா-பட்டம் பதவியா-மற்றப்படி சுகபோக வசதிகளா-தனிப்பட்ட சட்டங்களா? என்னதான் இல்லையாவற்றிற்கும் பொதுப்பணம் இருக்கிறதாச்சே, பொதுப் பணத்தில் குடும்ப ஆதிக்கம் அதிகாரம் செலுத்துகிறதாச்சே, சர்வமும் மனமும் போல வாழ்வு!

* * *

தேவலோகமும் தோற்றுப் போய்விடுமே சேனநாயக்கா மூப்பனார் உள்ளிட்டு அவரின் குடும்பக் கட்சியினருக்கும் இப்படியெல்லாம் சகல சௌபாக்கியங்களும் பரிபூரணமாய் விட்டதினால், இவர்கள் ஆடாத பாடாததே இல்லை. இன்றுள்ள நிலைமையில் இவர்களுக்கு சின்னஞ் சிறு இலக்கை எப்மட்டு? ஒற்றைக் கண்போதுமே விடுதலை இங்கிலண்டைப் பார்ப்பதற்கு? இங்கிலாந்தையோ அமெரிக்காவையோ பார்ப்பதென்றால் இரண்டு கண்கள் கூடப் போதாது இவர்களுக்கு. எனினும் கடைசியில் அவர்களின் கதியென்னவாகுமென்பது இவர்களுக்கே தெரியாமல் இருக்கிறது அச்சரியமல்ல.

* * *

இந்நிலைமையில் ஏழைகளின் நிலைமையோ மஞ்சுடைப் பாடு உணவு இல்லை. ஆடை இல்லை. தங்கிக்கொள்ள இடமில்லை. சுகவேட்டுக்கு மருந்தில்லை, என்றாலும் இந்த பாடக் கேடு தொலையும் காலம் அதிக தூரத்திலில்லையென்பதுபட்டும் ஓரளவு தெளிவாக அறியக்கிடக்கிறது.

* * *

இன்றைய தேசிய வருமானத்தின்படி கண்டபடியெல்லாம் பணத்தை நள்ளிடண்ண சேனநாயக்கா மூப்பனாருக்கு அவரின் குடும்ப ஆதிக்கத்தை நீடித்துக் கொள்ள இன்றுள்ள சூழ்நிலையில் முடியாது. வருமானத்தை பெருக்கக்கூடிய பஸ போக்குவரத்து, சினிமாக் கம்பெனி இன்வுமரன்ஸ், பாங்க் மற்றும் தொழிற்சாலை முதலியவற்றை தேசீயமயாக்குவதற்கு பார்லிமெண்டில் இடதுசாரிகளால் தீர்மானம் கொண்டுவரப்பட்டால், அதற்கு சேனநாயக்கா கட்சி சம்மதம் கொடுக்கவேண்டும் எனினும் அவர் அப்படி செய்யமாட்டார் என்பதில் ஐயப்பாடே கிடையாது. ஏன்? மேற்படி ஸ்தாபன சொந்தக்காரர்களுக்கு அப்படிச் செய்ய மாட்டேன் என்று உறுதி கூறியிருக்கிறபடியினால்தான். பெரிய மாளிகைகளுக்கும் சம்பளத்துக்கும் போக்குவரத்து சாதனங்களுக்கும் லட்சம் லட்சமாக செலவழித்தால் அரசாங்கப் பொக்கஷம் சூன்யமாகிவிடும் எனவே சேனநாயக்கா அரசாங்கம் குப்புறக் கவிழ்ந்து விடும்.

ஃ ஃ ஃ

சகல குறைகளும் தீர்ந்து ஆறெல்லாம் பாலாய்பெருக இக்கொண்டிருக்கிற இலக்கைக் இருக்கிற ஒரே ஒரு குறையான "கொடி" யைபற்றி முடிவு செய்துகொள்வதற்கு, சென்ற மாதக் கடைசியில் நகரசபை மண்டபத்தில் "சாதியாபிமானிகள்" கூடினார்கள். இந்தமாலிசாதியாபிமானிகளின் தூஷணமானவசமாரிகளை கேட்டுக் கொண்டிருந்த சாதிச்சிங்களவருக்கு உண்டான சிரிப்பை அடக்குவதே பரமசங்கடமாய் விட்டது, அவ்வளவும் தூஷணையும் வசமாரியும்தான்.

* * *

"சிங்கக் கொடியை-சிங்களக் கொடியாகவும், சிங்கள ராஜ்யத்திற்கு சிங்களவர்களிடையே தகுந்த நபர் இல்லையென்றபடியால் வட இந்தியாவிலிருந்து, 'தேஜோ பராக்கிரமம்" பொருந்திய நபரை வரவழைத்து இலங்கை அரசராக்க வேண்டுமென்று ஒருவர் பேசிய பொழுது திருமலை சிங்காவுக்கு உண்டான பொலாக கோபவெறியில், அவர் தலையிலிருந்த பேன்கள் கூட வெளியில் குதித்து விடும்போல் இருந்தது.

* * *

ஜன்ம சத்துருக்களான இந்தியர்களிலொருவருக்கு அரசர் பதவி வழங்கப்பெறுமிடத்தும் திருமலை சிங்காவுக்கு கோபவெறியுண்டாகவில்லை. அந்த "அரசர்பதவி" தன்னைப்போன்ற "வீரனுக்கு" கிடையாமற் போவதைப்பற்றியே அவருக்கு கோபவெறி தலைக்கேறியது.

* * *

அந்தப் பேச்சு முட்டாள்தனமாய் இருந்தபோதிலும் திருமலை சிங்காவுக்கு மட்டுமல்ல திரு ஜே. ஆர் ஜயவர்த்தனவுக்கும் கோபாக்னி உண்டாகியது. இதற்காக அந்த கூட்டநடவடிக்கைகளை அவரின் பத்திரிகையான "பொருமுண" மூலம் பரிகாசம் செய்துவிட்டார். சிங்களக் கொடி உயர்த்தப்பட்டதின் ஏற்படப்போகும் அரசபதவிக்கு தாம்தான் தகுதியுடையவர் என்று அவர் (திரு ஜயவர்த்தனு) உறுதியாக எண்ணியதாகத் தெரிகிறது போலும்!

* * *

போலித் தலைவர்கள் கொடியை நாட்டி அரச பதவியைபற்றிப் பேசி முட்டிக்கொள்ளுகிறார்களெனினும் ஏழை மக்கள் உணவின்றி உடையின்றி இடமின்றி உயிரைப் பிடித்துக் கொண்டு மரணத்தோடு-எலும்பும் தோலுமாகி-போராடுகிறார்கள் இந்நிலைமையை-இவர்களின்போக்கை-நன்கு அராய்ந்து பார்த்தால் இவர்களுக்கு தகுந்த-உயர்ந்த-பட்டம் "அலிபாபா கூட்டத்தார் என்று சொல்லுவதில் என்ன குறைவுண்டு?

பாரசீகத்தைத் தட்டிக் கொடுக்கிறது அமெரிக்கா

அமெரிக்க ஸ்தானிகர் பேச்சு

டெஹ்ரான், நவ. 4

பாரசீகத்தில் இருக்கும் அமெரிக்க ஸ்தானிகர் தாம் அந்நாட்டில் ஒன்றரை வருடகாலம் வதிந்திருப்பதாகவும் இந்தக் காலத்தில் அங்கு ஜனநாயகப் அதிக வளர்ச்சி அடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ரஷிய பாரசீக எண்ணெய்க் கம்பெனி நிறுவ கவாம் சுல்

குதிரைப் பந்தயம் ஒழிகிறது

சென்னை சர்க்கார் நடவடிக்கை

சென்னை, நவ. 5

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து சென்னை மாகாணத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக சென்னை சட்டசபையில் சர்க்கார் ஒரு மசோதா கொண்டுவந்து நிறைவேற்றுவார்கள் நேற்று நடைபெற்ற சென்னை சட்டசபையில் குதிரைப் பந்தயவரியை இரட்டிப்பாக உயர்த்தியிருக்கிறார்கள்.

தானே ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார் அல்லவா? அதுபற்றி அமெரிக்க ஸ்தானிகர் தமது நாட்டினர் உங்கள் இஷ்டப்படி நடக்கும் உங்கள் சுதந்திரத்தை ஆதரிப்பதாக"பாரசீகரிடம் கூறினார். அதன் பின் மேற்படி ஒப்பந்தத்தை ஊர்ஜிதப்படுத்த பாரசீகம் மறுத்துவிட்டது. (ராய்ட்டர்)

ஆசிரியருக்குக் கடிதம்

ஹிந்துமத ஸ்தாபன பராமரிப்பு

ஐயா,

எங்களது இந்து மத ஆலயங்களையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கென இந்து மதக் கோயில்கள் தர்ம பரிபாலனச் சட்டம் ஒன்று இருக்கவேண்டியது மிக அவசியமெனப் பல தடவைகளிலும் நாங்கள் விவாதித்து வந்துள்ளோம். நாங்கள் சரியான வழியில் முயற்சியெடுத்துக்கொள்ளாதது வருத்தத்தையே கொடுக்கின்றது இலங்கையிலுள்ள இந்து மத ஆலயங்களையும் சொத்துக்களையும் சரியான முறையில் பரிபாலனம் செய்யக்கூடியதாக சென்னையில் ஆக்கப்பட்டுள்ள இந்து மத ஆலயங்கள் தர்ம பரிபாலனச் சட்டத்தைப்போன்ற ஒரு சட்டத்தை ஆக்குவதற்கு புதிய பாராளுமன்றத்தின் சைவ பரிபாலன சபையும், மற்றும் பிரபல இந்துக்களும் உடனடியாக முயற்சிக்கவேண்டியது அவசியமாகும்.

வடக்கேயுள்ள அநேக இந்து மத ஆலயங்கள் அழியுந்தன்மையில் இருப்பதை அறிய ஆச்சரியமாகவேயிருக்கும். பெரிய கோயில்களும் சிறிய கோயில்களுமாகாணம் முழுமையும் அமைந்திருக்கின்றன இந்து மதமக்களின் வழிபாட்டுக்காக பொது நிதி மூலமாகவோ தனிப்பட்டவர்களின் பொருளுதவியினாலோதான் இந்த ஆலயங்கள் கட்டப்பட்டன. இந்த ஆலயங்களின் நிர்வாகத்தை திறம்பட நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து வைப்பதில் இவற்றை ஸ்தாபித்தவர்கள் சிரத்தை எடுக்கவில்லையென்பது இன்றுள்ள முறைகளிலிருந்து தெரிகிறது. இன்றுள்ள நிலைமை தொடர்ந்திருக்குமாயின் எங்கள் நாட்டிலுள்ள பழமையான ஆலயங்கள் விரைவில் அழிபாடுகளாகவே இருக்குமென்பது கூறித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. இந்து மத ஆலயசொத்துகளின் நிதி பராமரிப்பாடுகள் திட்டமான முறையில் சரியாக நிர்வகிக்கப்படவில்லை. இவற்றை ஒழுங்கான ஒரு திட்டத்தின் கீழ் கட்டுப்பாடு நடவடிக்கையுடன் கொண்டுவர வேண்டியது மிக அவசியம். யாழ்ப்பாணத்தில் அநேக ஆலயங்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள சொத்துக்களை உடையனவாகவும் வருடாந்தம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வருமானமுள்ளவைகளாகவும் இருக்கின்றன. இவையெல்லாம் பிழையான நிர்வாகத்தினால் அழிந்து போகின்றன.

ஆலயங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் முதலியனவற்றைப்பற்றி ஒரு குறிப்பிட்ட சபைக்கோ அல்லது தனிப்பட்ட நபருக்கோ ஆலயங்களின் மானேஜர்கள் காட்டவேண்டுமென்ற நியதி இன்றைய நிலைமைப்படி இல்லை இந்த ஆலயங்களின் வருவாய்க்கு உதவும் பொது மக்களும் இப்பணங்கள் செலவிடுவது சம்பந்தமாக ஒன்றும் பேசமுடியாது. ஆலயங்களில் அதை பீறிக் கிடைக்கும் வருவாய்களை ஆலயங்களின் மானேஜர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை பொது மக்கள் அறியமுடியாதபடி நிலைமை இருக்கிறது.

இன்று இந்து மத ஆலயங்கள் இருக்கும் நிலைமைகளை அரசாங்கத்துக்கு தெளிவாக நாம் எடுத்துக் கூறினால் தென் இந்தியாவில் இந்து மத ஆலயங்களைப் பாதுகாக்க ஆக்கப்பட்டுள்ள தர்ம பரிபாலனச் சட்டம் போன்று இங்கும் ஒரு சட்டத்தைச் சர்க்கார் கொண்டு வருமென்பதில் சிறிதளவும் சந்தேகமிருக்க வேண்டியதில்லை. எங்கள் நலன்களுக்காக மட்டுமன்றி பொது மக்களின் நலன்களை முன்னிட்டு இந்து மத ஆலயங்களின் நிர்வாகத்தை திட்டமான அடிப்படையில் உடனடியாக அமைத்துக்கொள்ள வேண்டியது மிக மிக முக்கியமாகும். தர்மகர்தா சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட சில ஆலயங்கள் எதிர்பார்த்த கைக்கூட திறமையாக நிர்வகிக்கப்படவில்லை இன்றுள்ள நிலையில் தென்னிந்தியாவில் கையாளப்பட்டுள்ள நடவடிக்கையை இங்கும் எடுத்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

இவ்விஷயத்தில் சைவ பரிபாலன சபையும் மற்றும் பிரபல இந்துக்களும் ஆலயங்களின் ஒரு நகல் தர்ம பரிபாலனச் சட்டத்தினை தயார்செய்து அதிகாரிகளிடம் சமர்ப்பித்து மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

"ஒரு இந்து"

யாழ்ப்பாணம்,
31-11-47.

தென் போர்னியோவில் புரட்சியா?

டுடியரசு சர்க்கார் மீது குற்றச் சாட்டு

டச்சு அரசாங்கத்தின் மிரட்டல்

பட்டேவியா, நவ. 4

இந்தோனேஷிய குடியரசு பாதுகாப்புப் படையினர் தென் போர்னியோவில் இறங்கி அங்குள்ள மக்களைப் புரட்சி செய்ய தூண்டியதாக டச்சுக்காரர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதுபோன்ற காரியங்கள் மேலும் நடக்குமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று டச்சுக்காரர் எச்சரித்துள்ளனர். [ராய்ட்டர்]

கொரியாவின் சுதந்திரம்

ஐ. நா. சபையில் அமெரிக்கத் தீர்மானம்

லேக்ஸக்ஸஸ், நவ 5

ஐ. நா. சபை அரசியல் கமிட்டியில் கொரியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது சம்பந்தமான இந்தியத் தீர்மானத்தின் மீது அம்சங்களை அமெரிக்கா ஏற்றுக்கொண்டு ஒரு புதிய தீர்மானத்தைப் பிரேரித்தது. இத்தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது.

இதன்படி பிரதேச தேர்தல்களுக்குப் பதிலாக தேசிய தேர்தல்கள் நடக்கும். தேசியப் பாதுகாப்புப் படையில் சேர்ந்தவரல்லாத ஒரு ராணுவ ஸ்தாபனங்கள் கலைக்கப்படும். சுதந்திர கொரியா அரசாங்கம் உதித்த 90-ம் நாளின் முன்னர் அமெரிக்க ரஷியப் படைகள் வாபஸ் வாங்கும்.

ரஷியப் பிரதிநிதி குரோமிக்கோ ஓர் 90 நிமிஷப் பிரசங்கம் நிகழ்த்தினார். அதில் கொரியாவின் வடபகுதி மக்களின் பொருளாதார நிலை சற்று அபிவிருத்தி அடைந்திருப்பதாகவும் தென் பகுதியோ சீர்கெட்டு கிரீஸ தேசத்து நிலைமையை கிடப்பதாகவும் கூறினார். ஜப்பானியர் பிடித்தடைத்த கைதிகளிலும் பார்க்க அமெரிக்க பிடித்ததடைத்த கைதிகள் அதிகம் என்று அவரால் கூறப்பட்டது.

அமெரிக்கா சார்பில் திரு பொஸ்டர் டுல்லேஸ் இதற்கு பதிலளித்தார்.

இத்துடன் விவாதம் முடிவுற்றது. [ராய்ட்டர்]

சீனாவுக்கு அமெரிக்க கடன்

2 கோடி 70 லட்சம் டாலர் உதவப்படும்

வாஷிங்டன், நவ. 4

சீனமத்திய அரசாங்கத்திற்கு 2 கோடி 77 லட்சம் டாலர் கொடுத்துதவுவதற்கு அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இக்கடனுள் 50 ஆயிரம் டன் கோதுமை, 43 ஆயிரம் டன் அமெரிக்க அரிசி, 30 ஆயிரம் டன் சயாமிய அரிசி, வைத்திய உதவிகள் முதலியனவும் அடங்கும். (ராய்ட்டர்)

விமானப் போக்குவரவு மகாநாடு

இந்தியாவும்பங்குபற்றியது

ஜெனிவா, நவ. 4

ஒரு சர்வதேச ஆகாய விமானப் போக்குவரவு மகாநாடு இங்கு நடைபெற்றது. அதில் இந்தியாவும், சைனவும் பங்குபற்றின மொத்தம் 30 தேசங்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டன. இந்தியா சார்பில் டி. சக்கிரவர்த்தி கலந்துகொண்டார். [ராய்ட்டர்]

முனிஸிபல் சபை சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகஸ்தர்

திரும்ப எடுக்கமுடியாதென மேயருக்கு கமிஷனர் மகஜர்

கொழும்பு, நவ 6

கொழும்பு முனிஸிபல் சபையில் இருந்து வேலை நீக்கப்பட்ட ஓவர்ஸியர் ஒருவரை திரும்ப வேலையில் வைக்க வேண்டுமென கொழும்பு முனிஸிபல் சபை தீர்மானித்திருந்தது. இப்பொழுது முனிஸிபல் சபை கமிஷனர் திரு எஸ். பி. விக்கிரமசிங்கா மேயர் திரு. ஆர். எல். ஸ. டி மெல்லுக்கு அனுப்பிய மகஜரில் நல்ல நிர்வாகத்திற்கப் பொது நன்மை கருதியும் பிரஸ்தாப ஓவர்ஸியரை பதவியில் நியமிக்க முடியாதென்று தெரிவித்துள்ளார்.

புதிய தொடர்புக் கமிட்டி அமைப்பு

ஐ. நா. சபை இந்தோனேஷியக் கமிஷன் தீர்மானம்

பட்டேவியா, நவ. 5

அமெரிக்க, ஆஸ்திரேலிய, பெல்ஜியப் பிரதிநிதிகள் அடங்கிய ஐ. நா. சபையின் இந்தோனேஷியக் கமிஷன் ஜோக்ஜகர்தாவில் ஒரு நிரந்தரத் தொடர்புக் கமிட்டியை நிறுவியுள்ளதாக இந்தோனேஷிய செய்தி ஸ்தாபனம் இன்று குறிப்பிட்டது. இக்கமிட்டி இவ்வாரமே அமைக்கப்படும். (ராய்ட்டர்)

மூன்று சக்கர ரிக்ஷாக்கள்

இலங்கைக்கு வந்துள்ளன

கொழும்பு, நவ, 5

இலங்கையில் உபயோகிப்பதற்காக மூன்று சக்கர சைக்கிள் ரிக்ஷாக்கள் வந்திறங்கியுள்ளன ரிக்ஷா தொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினர் இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். பாதுமக்களுக்கு நியாயமான விலையில் இவை கிடைக்கக் கூடியதாக இறக்குமதியாளர்களுடன் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் வீதிகளில் ஓடுந்த ரிக்ஷாக்களை பாவிப்பதற்கு சட்டத்திலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத் தலைவர் டாக்டர் டபிள்யூ. பாலேந்திராவுக்கு முதல் கூசென்ஸ வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மாஜி ஸ்தானிகர் தற்கொலை

நியூஹாம்ஷயர், நவ 4

கடந்த மகா யுத்தத்தின் போது அமெரிக்க ஸ்தானிகராக பிரிட்டனில் கடமை ஆற்றிய திரு. ஜோன் ஜி. விநாடை தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோனார்.

திரு. விநான்ட் தமது யுத்த ஞாபகங்களை எழுதி முடிக்கு உடம்பும் மனமும் நைந்து போயிருந்தார் என்று தெரிகிறது. (ராய்ட்டர்)

யாழ்ப்பாணத்தில் சிங்களவர் தமிழர் வேற்றுமை இல்லை

பௌத்த வாலிப சங்க காரியதரிசி அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 4

சென்ற ஞாயிறுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த வாலிப சங்கத்தினர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு ஒரு வரவேற்பு அளித்தனர்.

திரு. பண்டாரநாயக்காவை சங்க மண்டபத்தில் வரவேற்று பேசியபோது சங்கத் தலைவர் திரு. டபிள்யூ. மர்தேலிஸ வரவேற்புப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். காரியதரிசி திரு. பீரிஸ் 'ஸ்ரீ நாக விகார' எனும் பௌத்தர்கள் ஆலயம் உள்ள நிலத்தண்டை வாங்க ரூ25 000 வேண்டியிருக்கின்றதென்று குறிப்பிட்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது 'பௌத்தர்கள் சங்கம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட காலம் தொடக்கம் யாழ்ப்பாணத்தவர்கள் எம்மைச் சிங்களவர் என்று புறக்கணித்து வித்தியாசம் காட்டாது உதவி புரிந்து வந்திருக்கிறார்கள்.

திரு. ஸி. பொன்னம்பலம் (நகர சபைத் தலைவர்) பேசியதாவது:- 'சிங்களவர் ஏராளமாக யாழ்ப்பாணத்தில் குடியேறுவதையும், யாழ்ப்பாணத் தமிழர் ஏராளமாக தென் இலங்கையில் குடியேறுவதையும் நான் விரும்புகிறேன். இலங்கையில் தமிழஸ்தான், சிங்களஸ்தான இருக்க முடியாது. அது தமிழர்களை தற்கொலைபுரிந்துகொள்ளுவதாகும் தமிழர் சுயநலங்கொண்டு தலைவராகும் எண்ணத்துடன் சாதிப்பூசலைக் கிளப்பக்கூடாது ஒற்றுமையாகவே சிங்களவர் தமிழர் ஆகிய இரு ஜாதியினரும் இலங்கையில் வாழவேண்டும்.

திரு. பண்டாரநாயக்கா நன்றி கூறினார்.

கிரில்லப்பொனையில் துப்பாக்கிப் பிரயோகம்

ஆயுதந்தாங்கிய போலிஸார் எதரிகளைத் தேடுகின்றனர்

கொழும்பு, நவ 5

பழைய கிரில்லப்பொனை வீதியில் நேற்று மாலை நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக காயமடைந்த நவ்ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லை. ஆயுதந்தாங்கிய போலிஸார் இதில் சம்பந்தப்பட்டவர்களைத் தேடி வருகின்றனர்.

மால தீவு கப்பம்

கொழும்பு, நவ, 5

வழமையான கொண்டாட்டங்களுடன் மால தீவு சர்க்காரின் கப்பம் இன்று காலை கவர்னரிடம் இராணி மாளிகையில் செலுத்தப் பட்டது இலங்கையில் கவர்னரிடம் மால தீவு சர்க்கார் செலுத்தும் கப்பம் இதுவே கடைசி முறையென்று அறியப்படுகிறது மால தீவு சர்க்கார் உள் நாட்டு மந்திரி திரு அமின்திதி இவற்றை கவர்னரிடம் சமர்ப்பித்தார்.

கதம்பைக் கயிறு

இந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிராண்ட் விஞ்சுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota,
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய தேச சபை

கொரியா பிரச்னையில் இந்தியா ஆலோசனை வெற்றி

அகதிகள் பிரச்னைபற்றி அரேபிய நாடுகள் தீர்மானம்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் எதிர்க்கட்சியின் கதி

நியூயார்க், நவ 5

இன்று ஐக்கிய தேச அரசியல் கமிட்டியில் இந்திய பிரதிநிதியின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு கொரியா சுதந்திரத் திட்டம்பற்றி அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது அடுத்தமார்ச்சு மாதம் 31-ம் தேதிக்கு கொரியாவின் இரு பகுதிகளுக்கும் ஒன்றுபோல் சேர்ந்து தேர்தல் நடத்த வேண்டுமென்று கொரியா அரசாங்கம் ஏற்பட்ட 90 நாட்களில் அங்குள்ள அமெரிக்க—ரஷிய துருப்புகள் வெளியேற வேண்டுமென்று தீர்மானம் அறிவிக்கிறது.

'சிறு அசெம்பிளி'

இன்று வருட முழுவதும் வேலை செய்ய சிறு அசெம்பிளி நிறுவப்படுவது பற்றியுள் ள அமெரிக்க தீர்மானத்தைக் குறித்து ரஷியப் பிரதிநிதி பேசுகையில், துவேஷங்களையும் அரசியல் ஆத்திரகதையும் கலந்துவிட்டு பிரச்னைகளை நிதானமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் சிறு அசெம்பிளி நியமிப்பது ஐக்கிய தேசக் கொள்கைக்கு முரண்பாடானதென்றும் தெரிவித்தார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள்

லண்டன், நவ 5

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்றும் இது சமாதான உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுவதாகுமென்றும் இவ் விஷயம் ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமென்றும் இன்று லார்டு சபையில் அறிவிக்கப்பட்டது.

அகதிகள்

நியூயார்க், நவ 5

இன்று ஐக்கிய தேச சமூக கமிட்டியில், அகதிகள் பிரச்னையைத் தீர்க்க ஒரு சர்வ தேச மகாநாடு கூட வேண்டுமென்று எகிப்து, ஈராக், லெபானன் ஆகிய அராபிய நாடுகள் ஒரு தீர்மானம் கொண்டுவந்தன.

தென்னாப்பிரிக்க இந்தியர்

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை அடுத்த வாரம் அரசியல் கமிட்டியில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். பாகிஸ்தான் பிரதிநிதி கோஷ்டியார் ஐக்கிய தேச பிரதிநிதிகளுக்கு ஓர் விருந்தளித்தனர். காந்தி ஜெயந்தியன்று இந்தியா விருந்தளித்ததோடு விருந்தில் மதுபான வகையாவிலக்கப்பட்டிருந்தது போலவே இந்த விருந்திலும் அவை விலக்கப்பட்டிருந்தன (ராய்ட்டர்)

தமிழ்நாட்டின் இன்றையநிலை

திரு. மீனாட்சி சுந்தரம் பேசுவார்

கொழும்பு நவ. 7

இலங்கைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கத்தின் ஆதரவின் கீழ் வெள்ளிக்கிழமை 7-11-47 யன்று 4-05 மணியளவில் ஓர் பகிரங்கக் கூட்டம், பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெறும் அதற்குணம் அண்ணாமலைச் சர்வகலாசாலை பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 'தமிழ் நாட்டின் தற்போதைய நிலை' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

மந்திரிக்கு விருந்து

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ்ப்பாணத்தில் சுகாதார மந்திரி திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவுக்கும் ஸ்ரீமதி. பண்டாரநாயகாவுக்கும் கிராமக் கமிட்டிகள், நகர கவுன்ஸில்கள், அர்பன் சபை தலைவர் முதலியோர் ஞாயிற்றுக்கிழமை நகர மண்டபத்தில் ஒரு விருந்தளித்தனர்.

புறக்கோட்டை தேனீர்க்கடையில் 6 மூடை அரிசி

எதிரி ஜாமீனில் விடுதலை

கொழும்பு, நவ 6

புறக்கோட்டை ஐந்தாங் குறுக்குத் தெருவில் உள்ள ஒரு தேனீர்க் கடையில் அரிசி பதுக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்ததன் மேல் புறக்கோட்டை போலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் தம்பையா அங்கு சென்று சோதனை செய்தபோது 6 மூடை அரிசி கண்டு பிடிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக தேனீர்க் கடை உதவி மானேஜர் பிச்சைபுள்ளை கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்பட்டார். மாஜிஸ்டிரேட் எதிரியை ரூ. 1000 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கை 19-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இந்தோனேஷியா மந்திரி சபை

பட்டேவியா, நவ. 5

இந்தோனேஷிய குடியரசின் அந்நிய நாட்டு மந்திரி சாலிம் 7 மாதகாலம் உலகில் சுற்றுப் பிரயாணம் செய்தது பற்றி மந்திரி சபைக்கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பித்தார். குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்ணோவு

ஒரே சூலில் ஐந்து பிள்ளைகள்

சீன மாது பெற்றெடுத்தாள்

ஹாங்கை, நவ. 6

இங்கு ஒரு விவசாயியின் மனைவிக்கு ஐந்து பிள்ளைகள் ஒரே சூலில் பிறந்துள்ளன. மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் தாயும் சுகமே யிருக்கிறார்கள். இக் குடும்பத்திற்கு உதவுபுரிய டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் விசேட பிரதிநிதியை அனுப்பியுள்ளார்.

(ராய்ட்டர்)

ஆயிராயிருந்தார். நவம்பர், 21வது வனவுவில் நடைபெறும் சர்வதேச வர்த்தக மகாநாட்டுக்கு இந்தோனேஷியா தூதுக்கோவுடிசெல்லும். அதன் பிறகு அமெரிக்காவுக்கும் செல்லும்.

இத்தகவலை ஜோக்ஜகார்த்தாவிலிருந்து டச்சு வட்டாரம் அறிவிக்கிறது. (ராய்ட்டர்)

காமன்ஸ் சபையில் பர்மா சுதந்திர மசோதா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முதலாவது ஊர்வலத்தில் எலிஸபெத் மகாராணியும் அவரது இளைய புத்திரி மார்கரட் இளவரசியும் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து கண்ணாடி கோச்சில் செல்வார்கள். அவர்களுக்குப் பின் நார்வே அரசரும் கிரீஸ் ராணியும் ஒரு கோச்சிலும் டென்மார்க் அரசரும் அரசியும் மற்றொரு கோச்சிலும் செல்வர்.

இரண்டாவது ஊர்வலத்தில் மணப்பெண்ணான எலிஸபெத் இளவரசியும் அவரது தந்தை ஜார்ஜ் மன்னரும் ஐரிஷ் கோச்சில் செல்வர்.

மூன்றாவது ஊர்வலம் மேரி மகாராணி வாசலை தலைமாளிகையிலிருந்து புறப்படும். அதில் மேரி மகாராணியும் அவரது புத்திரி ராயல் இளவரசியும் செல்வர். அவர்களை தொடர்ந்து டச்சு இளவரசி ஜூலியானாவும் அவரது கணவர் பெர்னஹார்ட் இளவரசரும், அவர்களுக்குப் பின் ஸ்வீடன் அரசரும் அரசியும் செல்வர். ஊர்வலத்தில் மன்னர் சகோதரரான கிளாஸடனும் கோமகனும் கோமகளும் செல்வார்கள்.

கலியாணம் முடிந்து திரும்பும்போது எலிசபெத் இளவரசி தனது கணவர் லெப்டினன்ட் பிலிப் மவுண்ட் பேட்டனுடன் கண்ணாடி கோச்சில் வருவார். ஜார்ஜ் மன்னரும் எலிஸபெத் மகாராணியும் ஐரிஷ் கோச்சில் திரும்புவார்கள். மன்னரின் தகவல் காரியதரிசி கேப்டன் ரிச்சிக்குப் பதில் ரிச்சார்ட் கால்வில்லி நியமிக்கப்பட்டிருக்கிறார்

எடின்பரோ சர்வகலாசாலை மேற்றிராணியார், லிஸ்ஜி என்னும் ஜெர்மானியருக்கு டாக்டர் பட்டம் வழங்கினார்.

(ராய்ட்டர்)

அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க பாரசீகத்தின் முயற்சி

பொருளாதார மசோதா

டெஹ்ரான், நவ. 5

பாரசீகத்தின் பொருளாதாரத்தை அந்நிய நாட்டார் சூறையாடுவதை யொழிக்க பொருளாதார மந்திரி பாரசீக பாராளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார் அதன்படி இப்பொழுது பாரசீகத்திற்கும் மற்ற அந்நிய நாடுகளுக்குமுள்ள வர்த்தக உடன்படிக்கைகள் திருத்தியமைக்கப்படும். பாரசீகத்தில் கைத்தொழிலை நிறுவும் அந்நிய முதலாளிகளும் அந்நிய ஏற்றுமதி வர்த்தகர்களும் பாரசீகத்தில் அவர்கள் நிறுவும் வர்த்தக ஸ்தாபனங்களில் பாரசீகத்தாரையோ அல்லது அவர்கள் சொந்த நாட்டாரையோ பட்டுமே நியமிப்பதுடன் அவர்கள் நியமிக்கும் ஏஜண்டுகள் பாரசீகத்தாராக இருக்கவேண்டும். இதனால் பாரசீகத்தில் வருவோர் தொழில் நடத்தும் அமெரிக்கர், பிரிட்டிஷார் பாதிக்கப்படுவார்கள்.

ரஷிய-பாரசீக ஆயில் ஒப்பந்தம் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதை மன்னர் சரியென்று சம்மதித்துவிட்டார்.

பாரசீக மக்களை மூலதனப் பாட்டு 10 லட்சம் பவுண் மூலதனத்தில் ஒரு ஆயில் கம்பனி நிறுவியிருக்கிறார்கள் டெஹ்ரானிலிருந்து 110 மைல் தூரத்திலுள்ள குப்குமில் இக் கம்பனி எண்ணெய்க் கிணறுகள் வெட்டும்.

பாரசீகத்துக்கும் சுவிஸ் ஐ அரேபியாவுக்குமிடையே ஸ்தானிக உறவு ஏற்படுத்த முயற்சி நடைபெறுகிறது. மூன்று வருடங்களுக்கு முன் மெக்காவிலிருந்து ஒரு பாரசீக யாத்திரீகர் கொலை செய்யப்பட்டதிலிருந்து இந்த உறவு ரத்தாகி இருந்தது. பாரசீகத்தின் பிரிட்டிஷ் ஸ்தானாதிபதி ராக்டல் இன்று லண்டனிலிருந்து வந்து சேர்ந்தார்.

(ராய்ட்டர்)

காட்டில் விறகு வெட்டச் சென்றவர் கதி

குண்டுபாய்ந்து மரணம்

வெலஸ்முல்ல, நவ 6

ஜிலம்பிட்டியா மடுவெலாகந்தையைச் சேர்ந்த பி. ஏ. கிரிகாரிஸ் என்பவர் காட்டில் தடிகள் வெட்டக்கொண்டிருந்தபோது அங்கு வேறு மிருகத்திற்கு குறி பார்த்துவைக்கப்பட்டிருந்த துப்பாக்கி யொன்றிலிருந்து குண்டு இவர் மீது பாய்ந்ததால் காயமடைந்தாரென்று கூறி வெலஸ்முல ஆஸ்பத்திரியில் இவரை அனுமதித்தனர் இவர் சிறிது நேரத்தில் மரணமானார் விசாரணை நடத்திய மாஜிஸ்திரேட் திரு ஈ. வீரசேகரா விபத்தினால் ஏற்பட்ட மரணமென்று தீர்ப்பளித்தார்.

வெங்காயத்திற்கு ஏற்பட்ட திடீர் கிராக்கி

அந்தர் ரூ 45 ஆக விற்கப்படுகிறதா?

அச்சுவேலி, நவ 4

விளைபொருள் சங்கங்களுக்கு அந்தர் ரூ 13-44 சதமாக ஒப்பட்டு வந்த உள்ளூர் வெங்காயம் விலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டுள்ளது நேற்றுத் தொடக்கம் ஒரு அந்தர் வெங்காயம் ரூ 45 வரை பிளாக் மார்க்கெட்டில் விற்கப்பட்டு வருகிறது.

இவ்வித திடீர் மாற்றத்திற்குக் காரணம் இந்தியா வெங்காய ஏற்றுமதி தடை செய்யப்பட்டதால் உள்ளூர் வெங்காயத்திற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதெனத் தெரிகிறது

இப்பகுதிகளில் அதிகமாய் வெங்காயம் பயிரிடும் அடுத்த காலம் மார்கழி மாதம் அதிக விலை காரணமாய் பயிரிடுவதற்கு வைத்திருந்த வெங்காயம் முழுவதையும் விவசாயிகள் கூடுதல் விலைக்கு விற்க தொடங்கிவிட்டனர் இந்தியாவிலிருந்து வெங்காயம் வராவிடின் விதை வெங்காய லக்ஷயத்தில் எதிர்பாராத அளவு ஓர் பெரும் நெருக்கடி ஏற்படக் கூடும் என பலர் அஞ்சுகின்றனர்

(ந-ரி)

சீனா

சீன யுத்தத்திற்கு ஆயுதமனுப்பாதே!

கானடா வாலிபர்கள் சத்தியாகிரகம்

நவம்பர் 21ல் பொதுத் தேர்தல்

நாங்கிங், நவ 5

நவம்பர் 21-ம் தேதி சீன பொதுத் தேர்தல் நடைபெறுகிறது அரசாங்க ஊழியர்கள் எவரும் அதில் கலந்துகொள்ளலாகாதென்று சீன சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். தேர்தலை மேல்பார்வை செய்ய சீன பாராளுமன்றசபை பொது ஜன அரசியல் சபை, அரசியல அபிவிருத்தி சங்கம் ஆகியவைகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது

உள்வறிக்கதாசவும், தேசத்துரோகம் செய்ததாகவும் குற்றஞ்சாட்டி கம்யூனிஸ்டுகளுக்கு உதவி செய்ததாக மூகடானில் 50 பேர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்.

மஞ்சூரிய யுத்தம்

அமெரிக்கர்களால் பயிற்சி செய்யப்பட்ட சீன சர்க்கார் துருப்புகளால் மஞ்சூரிய யுத்தப்

மருந்துசாலையில வெடி விபத்து

12 பேர் மரணம்; 90 பேருக்கு காயம்

ஹெல்சிங்கி, நவ. 6

ரௌமோ என்னுமிடத்தில் நேற்றிரவு ஒரு தொழிற்சாலையிலுள்ள அறையொன்றில் குளோரைன் நிரவகம் வைக்கப்பட்டிருந்த ஒரு டாங்கி வெடித்தது காரணமாக 12 பேர் கொல்லப்பட்டும் 90 பேர் காயமடைந்தும் உள்ளனர். இந்த விபத்தினால் கட்டிடத்திற்கு தீப்பிடித்துவிட்டதனால் நெருப்பணைப்போர் தீயை அணைக்க முடியவில்லை. (ராய்ட்டர்)

சீன சர்க்காருக்கு சாதகமாக ஒருப்பியிருக்கிறது. இந்த துருப்புகள் மூக்டான்-சாகசுன் ரயிலதாவிலுள்ள எதிரிகளைவிரட்டியடித்து சாங்சுன்னுக்கருகே போராடும் இரு கம்யூனிஸ்ட் டைகளைவளைந்துகொண்டன கம்யூனிஸ்ட் கெரில்லாக்களை அடக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதுபற்றி ஆலோசிக்க சியாங்கை ஷேக், ஷாண்டுங் சியான்சு, அன்வெய், ஷான்ஸி மாகாணங்களை சேர்ந்தராணுவ தளபதிகளை நாங்கிங் நகருக்கு வரும்படி அழைத்திருக்கிறார்

கானடா வாலிபர்கள் சத்தியாக்கிரகம்

மாண்டரீல், நவ 6

சீன சர்க்கார் துருப்புகளுக்கு இங்குள்ள ஆயுதத் தொழிற்சாலை வெடி மருந்துகளும் ஆயுதங்களும் அனுப்பி வருகின்றன என்று ஒரு கப்பலில் அவைகளை ஏற்றப்படும்போது. ஆண்களும் பெண்களுமாக 40 வாலிபர்கள் 'சுதந்திர சீனத்திற்கு கானடா வேலை செய்ய வேண்டும்' என்று எழுதப்பட்ட விளம்பரங்களுடன் துறைமுகத்தில் நின்றுகொண்டு சத்தியாக்கிரகம் செய்தார்கள். 10 நிமிடத்திற்குப் பின் அவர்கள் திரும்பிவிடவே அக்கப்பலில் விமான பீரங்கி ஸுக்கு உபயோகமாகும் 2500 டன் வெடி மருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

(ராய்ட்டர்)

தேர்தல் தினத்தன்று தாக்கியதாக வழக்கு

எதிரிகள் விடுதலை

அனுராதபுரம், நவ. 6

அனுராதபுரம் தொகுதி பாராளுமன்ற பொது தேர்தல் தினத்தன்று எம். எஸ். மாசிலாமணி யென்பவரைத் தாக்கி காயம் விளைவித்ததாக திரு ஏ. சிவகொழுந்து, டாக்டர் ஈ. ஏ. புலஸ்குளமே, திரு எஸ். ஏ. பதிப் பிள்ளை ஆகிய மூவரையும் குற்றஞ் சாட்டி மாசிலாமணி யென்பவர் தாக்கல் செய்த வழக்கு அனுராதபுரம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எடுக்கப்பட்ட போது வழக்காளியோ அன்றி வழக்காளர் தரப்பு வழக்கறிஞரோ கோர்ட்டிற்கு வராததினால் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

முனிஸிபல் சபைக் கூட்டம்

'கோரம்' இன்றி ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ 6

வீதிகளில் திரிந்து பொருள்களை விற்பவர்கள் மீது - உணவுப் பொருள்கள் விற்பவர்களை நீங்கலாக - போலிஸார் நடவடிக்கை எடுக்கப்படாதென முனிசிபல் சபை முதலில் தீர்மானித்திருந்தது. பின்னர் முனிஸிபல சபைக் கமிட்டிகள் இதனை வாபஸ் பெற வேண்டுமென்றும போலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தீர்மானத்தை அமுலுக்கு கொண்டுவர சிபார்சு செய்தன. இது சம்பந்தமாக முனிசிபல் சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று மேயர் திரு. ஆர் எல். எஸ். டிமெல் தலைமையில் கூட்டம் நடந்தபோது விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. பெருந்தொகையானவர்கள் இக்கூட்டத்துக்கு - வீதிகளில் திரிந்து சாமான்கள் விற்கும் ஆண்களும் பெண்களும் வந்து பொது மக்கள் காலரிகளில் இருந்தனர். தீர்மானம் தேனீர் இடைவேளைக்குப் பின்னரும் விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. அது பற்றி முடிவு செய்ய வேண்டிய நேரம் வந்த போது சபையில் கோரம் இல்லாததால் கூட்ட நடவடிக்கையை இம் மாதம் 10-ம் தேதிக்கு மேயர் ஒத்திவைத்தார்.

இதற்கு முன் சபையில் பாடசாலைக் கூப்பன்கள், வீதிகளில் மின்சார வெளிச்சம், முனிஸிபல் வைத்திய சாலைகள் ஒழுங்குகள் முதலியன பற்றியும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

திரைப்படத்தில் இலங்கை

ஹோலிவுட் படம் பிடிக்கும் நிபுணர் முயற்சி

கொழும்பு, நவ 6

இலங்கை மக்கள் வாழ்க்கை இலங்கையின் நிலைமை, பழைய சரித்திர சம்பந்தமான வைகளை, கைத்தொழில், சமூக விஷயங்கள் முதலியனவற்றைப் படம் பிடித்து அமெரிக்காவிலுள்ள சுமார் 31000 கல்வி நிலையங்களுக்கு சப்ளை செய்யும் நோக்கத்துடன் ஹோலிவுட் படப் பிடிக்கும் நிபுணரில் ஒருவரான திரு. வால்டர் ஈ. ஹொட்கின்ஸ் தமது மனைவியுடன் இலங்கைக்கு சனிக்கிழமை 'எம்பயர் பிரன்ட்" என்னும் கப்பலில் வந்திருந்தார். நேற்று கொழும்பு துறைமுகத்தில் மாலதிவு சர்க்காரின் பிரதிநிதி கப்பம் செலுத்தி கொண்டுவந்த பொருள்களுடன் துறைமுகத்தில் இறங்கும்பொழுது அதனை இவர் படமாக எடுத்துள்ளார்.

இவர் இலங்கையில் சுமார் ஆறுமாத காலம் அல்லது ஒரு வருட காலம் தங்கியிருந்து மிக முக்கியமான விஷயங்களையெல்லாம் படம் பிடித்து அமெரிக்க மக்களிடையே இலங்கையைப் பற்றியிருக்கும் அறியாமைகளை நீக்குவதற்கு அவற்றை அங்கே அனுப்புவார் என்று கூறப்படுகிறது. இலங்கையில் இவற்றைச் செய்து கொள்ள வேண்டிய விஷயங்களில் அனுமதி முதலியனவற்றைப் பெறுவதற்கு உள்நாட்டு மந்திரி ஸர். ஒலிவர் குணதிலக்காவை இவர் சந்திப்பார். இவருடைய மனைவியும் படம் பிடிப்பதில் அனுபவம் உள்ளவர் என்றும் கூறப்படுகிறது

வள்ளத்தில் 331 கொத்து அரிசி

கடத்துகையில் போலிஸார் கண்டுபிடித்தனர்

மாத்தறை, நவ. 6

மாத்தறை நகரில் இருந்து சுமார் 2 மைல் தூரத்திலுள்ள நதுகலா என்னும் கிராமத்தில் இரவு நேரத்திலே ஒரு வள்ளத்தில் 331 கொத்து நாட்டரிசியைக் கடத்துகையில் போலிஸார் கண்டு கைப்பற்றினர்.

கட்டுவாரி என்னுமிடத்திலிருந்து அரிசி கடத்தப்படுவதாக தகவல் கிடைக்கு போலிஸார் சென்று இவ்விடத்தில் வள்ளத்தைக் கைப்பற்றியதாகவும் அப்பொழுது சிறிது கலவரம் நடந்ததாகவும் போலிஸ சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

வள்ளத்தில் அரிசி கடத்தி வந்த மூவரில் ஒருவர் தப்பியோடிவிட்டதால கைதுசெய்யப்பட்ட கார்டியாஸ், பாடி ஆகிய இருவரும் மாத்தறை மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் தலா ரூ 2000 பிணையில் போகுமாறு விடுத்து, மூன்றாவது எதிரியான யூ காமிஸ் என்பவரை கைது செய்ய வாரண்டு பிறப்பிக்கப்பட்டது.

ஜவுளிக் கூப்பன்கள் மோசடி செய்ததாக வழக்கு

கொழும்பு, நவ. 6

ஜவுளி கட்டுப்பாட்டிலாகாவிலிருந்து சுமார் 15,000 ஜவுளிக் கூப்பன்கள் சம்பந்தமாக மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு நேற்று கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கில் திரு. பொன்னம்பலம் என்பவருக்கு சம்மன்ஸ் வழங்கப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டதால் மீண்டும் சம்மன்ஸ் வழங்கும்படி நீதிபதி தெரிவித்து விட்டு வழக்கை 19-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். மன்சூர் ரூ. 500 பிணையில் போகுமாறு விடப்பட்டார்.

சிர

நேத்திராஞ்சனத் தைலமே சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மை புத்தயிர் கொடுத்து காப்பாற்றியது.

சப்ததீவு வாலிப சங்க கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு செல்லுவதாவது:

"சென்ற சில காலங்களாக சிர ரோக உபாதையினால் கண்ணினும் கடும் வலித்தம் ஏற்பட்டு பல வித வைத்தியங்கள் செய்தும் சுகம் காணாது கடைசித் தடவையாக திரு. எம். கே. ஜெகநாதன் கண் வைத்தியரினால் வெளிவரப் பெற்ற சிர நேத்திராஞ்சனத் தைலத்தை இந்த கிழமை பாவித்தமட்டில் எமது சகல உபாதைகளும் நீங்கியதுடன் எனது கண்ணுக்கும் பூரண சுகத்தைப் பெற்றேன். இத் தைலத்தின் அபூர்வ குணத்திற்கும் சிறப்பைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இதன் நற்குணத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்". ஒப்பம்

திரு. வி. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசி,
புங்குடுதீவு.

சிர

நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர்வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இரைமல, இளைப்பு, நரம்புத் தளிர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீர் முழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3 25
4 ,, ,, ரூ. 5-50

தயாரிப்பாளர்:-
எம். கே. ஜெகநாதன்,
யூனானி கண் வைத்தியர்,
பேரியகடை, யாழ்ப்பாணம்.

கல்வியே கருந்தனம்

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யபபட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

இன்று காண்பிக்கப்படுவது! புத்தம் புதிய படம்!!

மகத்தான 3-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சுவர்ணலதா-நஸீர் திறமபட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org